# இறையியல் தேடல்கள்

வடிவம் : 11 மார்கழி 1998 வண்ணம் : 02



## துயர் நீக்கும் கிறிஸ்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI — IYAL KOLANGAL

Tamil Theological Quarterly

வடிவம் : 11
வண்ணம் : 02
மார்கழி, 1998

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் :

அருட்திரு ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர்கள் :

அருட்திரு ச. வி. ப. மங்களராஜா
அருட்சகோ. செ. வசந்தகுமார்
அருட்சகோ. செ. எ. றொஷான்
அருட்சகோ. சி. லியோ ஆம்ஸ்ரோங்
அருட்சகோ. தே. ரவிராஜ்

விநியோகம் :

அருட்சகோ. செ. றோய் பேடினன்ட்
அருட்சகோ. ம. பத்திநாதர்

வெளியீடு :

புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
( தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும் )

EDITOR :

*REV. FR. J. NICHOLAS*

SUB EDITORS :

*REV. FR. S. V. B. MANGALARAJAH*
*BRO. S. VASANTHAKUMAR*
*BRO. S. A. ROSHAN*
*BRO. S. LEO ARMSTRONG*
*BRO T. RAVIRAJAH*

DISTRIBUTION :

*BRO. S. ROY FERDINAND*
*BRO. M. PATHINATHAR*

PUBLICATION :

*ST. FRANCIS XAVIER'S SEMINARY*
*COLUMBUTHURAI,*
*JAFFNA,*
*SRI LANKA.*
*( For private ciruculation only )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்கம்

★ ஆசிரியர் உரை 4

1. யூபிலி ஆண்டும்
இயேசு மனுஉரு எடுத்தலும் 5
*அருட்திரு. செ. ஜோ சனிஸ்ரன்*

2. கிறிஸ்து ஏன் பிறந்தார்? 13
*அருட்சகோ. எஸ் எயின்சிலி றொஷான்*

3. மண்ணில் உதித்த ஒளி 19
*திரு. இ. ம. ஜெயசீலன்*

4. இறைமகனை ஈன்றெடுத்த
மறைபொருள் மரியா 23
*அருட்திரு. பீ. கிறிஸ்து நேசரட்ணம்*

5. கிறிஸ்து பிறப்பும் நற்செய்தி அறிவிப்பும் 30
*அருட்திரு. ம. வி. இ. இரவிச்சந்திரன்*

6. தற்கால சூழ்நிலையில் கிறிஸ்மஸ் 35
*அருட்சகோ. ம. அன்ரன் அமலதாஸ்*

★ Synopsis 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணகத் தந்தையை நோக்கிய பயணம்

ஆயத்தத்தின் மூன்றாவதும் இறுதியுமான 1999 ஆம் ஆண்டு விசுவாசிகளின் அனுபவ எல்லையை விரிவுபடுத்துவதை இலக்காகக் கொண்டது, அப்போது கிறிஸ்துவின் நோக்கிலும் யாரினால் கிறிஸ்து அனுப்பப்பட்டாரோ, யாரிடம் திரும்பிச் சென்றாரோ, அந்த பரலோகத்திலிருக்கும் தந்தையின் நோக்கிலும் ( மத். 5:45, அரு. 16:28 ) அவர்கள் எல்லாவற்றையும் காண்பார்கள்.

"முடிவில்லா வாழ்வு என்பது உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசுக்கிறிஸ்துவையும் அறிவதே" ( அரு. 17:3 ) கிறிஸ்தவ வாழ்வு முழுவதும் பிதாவின் இல்லத்தை நோக்கி மேற்கொள்ளப்படும் ஒரு மாபெரும் யாத்திரையைப் போன்றது. ஒவ்வொரு மனிதப் பிறவியின் மட்டிலும், குறிப்பாக ஊதாரிப்பிள்ளையின் மட்டில் அவர் காட்டும் நிபந்தனையற்ற அன்பை நாம் நாள் தோறும் கண்டறிகின்றோம். (லூக். 15 11–32) இந்த யாத்திரையானது ஒவ்வொரு மனிதனின்உள்ளத்திலும் நிகழ்ந்து அதிலிருந்து விசுவசிக்கும் சமூகத்திற்கும். பின்னர் மனுக்குலம் முழுவதற்கும் எட்டுகிறது.

கிறிஸ்து எனும் ஆளை மையமாகக் கொண்ட யூபிலியானது இதன் மூலம் பிதாவுக்கு மிகுந்த புகழ்ச்சியளிக்கும் செயலாக மாறுகின்றது.

" நம் ஆண்டவராகிய யேசு கிறிஸ்துவின் தந்தையும் கடவுளுமானவர் போற்றி அவர் கிறிஸ்துவுக்குள் வானக வாழ்வுக்குரியவையும் தேவஆவி தருபவையுமான கொடைகள் அனைத்தும் பொழிந்து நமக்கு ஆசி அளித்தார். எவ்வாறெனில் நாம் அவரது திருமுன் பரிசுத்தரும் மாசற்றவருமாய் இருக்குமாறு உலகம் உருவாகுமுன்னரே அவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தேர்ந்து கொண்டார்." ( எபே. 1:3-4 ).

இந்த மூன்றாவது ஆண்டில் பிதாவை நோக்கி பிரயாணம் செய்யும் உணர்வானது மனுக்குல மீட்பராகிய கிறிஸ்துவை இறுகப்பற்றிக் கொள்ளுவதன் மூலம் உண்மையான உளமாற்றம் என்னும் பிரயாணத்தை மேற்கொள்ளுமாறு ஒவ்வொருவரையும் ஊக்குவிக்கவேண்டும். இதில் பாவத்திலிருந்து விடுதலை பெறுதல் என்னும் எதிர்மறையான ஒரு அம்சமும், நற்செய்தியால் உறுதிப்படுத்தப்பட்டு. ஆழப்படுத்தப்பட்ட இயற்கைச் சட்டத்திலிருந்து வெளிப்படும் அறமதிப்பீடுகளை ஏற்றுக்கொண்டு நன்மையைத் தேர்ந்தெடுத்தல் என்ற நேர்மறையான அம்சமும் ஆகிய இரண்டும் அடங்கும். பச்சாத்தாப அருட்சாதனத்தின் சிறப்பை உணர்வதற்கும். ஆழ்ந்த பொருளுடன் அதை சிறப்பாகக் கொண்டாடுவதற்கும் இது தக்க சந்தர்ப்பமாகும். மனித வாழ்வில் அறமுறையான நோக்கின் அடித்தளமே பெரும்பாலும் சீர்குலைந்திருக்கும். இன்றைய சமுதாயத்தில் கிறிஸ்தவ அன்பின் தவிர்க்க முடியாத நிபந்தனையாக மனந்திரும்புதல் உள்ளது.

( 2000 யூபிலி–ஆண்டு பற்றி பரிசுத்த தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் எழுதிய அப்போஸ்தலிக்க மடல் எண் 49, 50. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ராமாவிலே ஒரு குரல் கேட்கிறது,
ஒரே புலம்பலும் பேரழுகையுமாயிருக்கின்றது;
இராகேல் தன் குழந்தைகளுக்காக அழுதுகொண்டிருக்கிறாள்;
ஆறுதல் பெற அவள் மறுக்கிறாள்".

(மத். 2 : 17 – 18)

நிலவைக் காணத் துடித்து எம் மண்ணில்
அவலம் நிறைந்து தவிக்கும் நெஞ்சங்களிலே
கொழுந்து விட்டெரியும் துன்ப துயர வேளையிலே
எழுந்து வந்தார் எம் மீட்பர் இயேசு பிரான்

விடிவெள்ளியாய் அவலத்திலே வாழுகின்ற மாந்தருக்கு
அடிமையின் தளை அகற்றி ஆறுதல் தரும்
குடிமகனாய் குவலயத்தில் மனிதனாய் வந்துதித்து
படிகள் கட்டி பாவிகள் மீள பாதையாய் வந்தார்
இயேசு பிரான்



# எம் இனிய நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்கள்

" இறையியல் கோலங்கள் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் நீக்கும் கதிரவனாய் இறைமகன் கிறிஸ்து

குழந்தைகளின் அழுகுரல்கள் அனைவரின் உள்ளங்களையும் நெகிழ வைக்கின்றன. தாயிழந்த குழந்தைகளாய் இன்று நம் நாட்டுத் தமிழ் மக்கள் தவித்து நிற்பது பரிதாபக் காட்சியே! யாருக்கு யார் ஆறுதல் கூறுவது? ஆறுதல் கூறினாலும் தேறாத நிலையில் பலர் உள்ளனர். சொந்த மண்ணிலே இடம் பெயர்ந்து அடிமைகளாய் விரக்தியின் விளிம்பிலே வாழும் எம் இனத்திற்கு நம்பிக்கையின் ஒளி கிடைக்கும் காலம் எப்போ வருமென்ற ஏக்கமும் கேள்வியும் தொடர்ந்து கொண்டே போகின்றது.

பலருடைய அழுகுரல்கள் கேட்கின்ற இக்காலத்திலே துயர் நீக்கும் கதிரவனாய் இறை மகன் கிறிஸ்துவின் பிறப்பு விழா அமைகின்றது. மனித அவலங்களின் ஒலங்கள், அக்கிரமங்களின் சாக்குரல்கள் ஊடாக அமைதியின் அண்ணலாய்ப் பிறந்த இயேசுவின் குரல் ஆறுதலளிக்கின்றது.

இன்று ஒடுக்கப்பட்டோரின் அபயக்குரலுக்கு செவிமடுக்காத கல்நெஞ்சராய், பாரவோன் மன்னனுடைய பரம்பரையாய், பதவிப் பேய்பிடித்து, பணத்தை விழுங்கும் பிணங்களாய் பல அரசியல் கட்சிகள் திகழ்கின்றன. எரேமியா இறைவாக்கினர் "ராமாவிலே ஒரு குரல் கேட்கின்றது. ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கின்றது. இராக்கேல் தன் குழந்தைகளுக்காய் அழுதுகொண்டிருக்கிறாள் ......" என்று கூறியது இன்று எம் மண்ணிற்கு பொருத்தமாய் இருக்கின்றது.

செம்மணியிலே புதையுண்டு குரல் எழுப்பமுடியாத எலும்புக் குவியல்கள் மறைக்க முடியாத மனித உரிமை மீறல் சின்னங்களாக வரலாற்றிலே நினைவு கூரப்படும். இவை எல்லாவற்றிற்கும் நாம் பதில் காண இயேசுவின் பிறப்பு விழா எமக்கு வழி காட்டுவதாக.

**அருள்திரு யே. நீக்கிலஸ்**
ஆசிரியர்

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
10–12–1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூபிலி ஆண்டும் இயேசு மனுஉரு எடுத்தலும்

❋ அருட்திரு. செ. ஜோ சுனிஸ்ரன்
ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

## முன்னுரை:

உலகம் முழுவதும் புதியதொரு சகாப்தத்தில் காலடி எடுத்து வைக்க பல ஆயத்தங்கள் செய்யும் இவ்வேளையில், கத்தோலிக்க திருச்சபையானது 2ஆம் சகாப்த ஆண்டின் நிறைவை இயேசு மனுவுரு எடுத்ததன் 2000ஆம் ஆண்டை மாபெரும் யூபிலி ஆண்டாகப் பிரகடனம் செய்து, அதற்குத் தன்னைப் பல்வேறு வழிகளில் ஆயத்தம் செய்து வருகிறது. இந்த ஆயத்த காலத்தில் மீண்டும் ஒரு முறை கிறிஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து கொண்டாடவிருக்கின்றோம். இது எம்மை இன்னும் ஆழமாக யூபிலி ஆண்டுக்குத் தயார்ப்படுத்த, அதற்காக நாம் மேற்கொள்ளும் ஆயத்த செயல்களை சீர்தூக்கிப் பார்க்க இக் கிறீஸ்து பிறப்புக்காலம் அழைப்பு விடுக்கின்றது.

## யூபிலி ஆண்டு - லேவி - 25 : 8-55

யூபிலி ஆண்டு என்றால் என்ன? அதில் அடங்கியுள்ள தன்மைகள் எவை? என்பன பற்றி நாம் பழைய ஏற்பாட்டில் இருந்து தான் அறிந்து கொள்கிறோம்.

உப. ஆகமம் 15; லேவியர் ஆகமம் 19 அதிகாரங்களிலும் இன்னும் தெளிவாக லேவியர் ஆகமம் 25ஆம் அதிகாரத்திலும் யூபிலி ஆண்டு பற்றிக் காண்கிறோம். ஒவ்வொரு 50வது ஆண்டும் யூபிலி ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அந்த ஆண்டில் 2 முக்கிய விடயங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.

"(1) சொத்துக்களின் மீட்பு லேவி 25: 23-34

(2) ஆட்களின் மீட்பு லேவி 25: 35-55"[1]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொத்துக்களின் மீட்பு:

நிலத்தை அல்லது சொத்தை ஒருவன் கடனாக விற்று மீண்டும் அதை மீட்க முடியாமல் போனால் "யூபிலி ஆண்டிலே அவன் தன் நில புலங்களுக்கு திரும்பிவர அவனுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்." (25; 28)

> சொத்துக்கள் "யூபிலி ஆண்டில் விற்றவனுக்கே திரும்பக் கிடைக்கும்" (25: 31)
>
> "அவர்களுக்கு சொந்தமான விற்கப்பட்ட எந்த வீடும் யூபிலி ஆண்டில் திருப்பித் தரப்படும்" (25:33)

இவ்வாறு இந்த யூபிலி ஆண்டானது தமது உடமைகளையும் சொத்துக்களையும் திரும்பிப் பெறும் ஒரு காலமாக இருந்தது.

## ஆட்களின் மீட்பு:

அந்த நாட்களில் மக்கள் அடிமைகளாக விற்கப்படுகின்ற ஒரு சூழல் நிலவியது. அதனால் யூபிலி ஆண்டில் "அவரும் அவர்தம் பிள்ளைகளும் விடுதலையாகி தங்கள் இனத்திற்கும் மூதாதையரின் நிலபுலங்களிடத்திற்கும் திரும்பி செல்லட்டும்" (25: 41)

"அவர்கள் அடிமைகளாக விற்கப்படலாகாது" (25: 42) யாராவது அடிமைகளாக விலைக்கி வாங்கப்பட்டு "அவர்கள் மீட்கப் படாமல் போனால் யூபிலி ஆண்டில் அவர்களும் அவர்கள் பிள்ளை களும் விடுதலை பெறுவர்" (25:54)

இதிலிருந்து இந்த யூபிலி ஆண்டானது

(1) ஒரு விடுதலையின் ஆண்டு (2) ஒரு நீதியின் ஆண்டு (3) ஒரு படைப்பின் ஆண்டு (4) ஒரு புனித ஆண்டு என்று கண்டுகொள்ளக் கூடியதாக உள்ளது.[2]

## ஒரு விடுதலையின் ஆண்டு:

யூபிலி ஆண்டானது ஒரு விடுதலையின் ஆண்டு என்பது லேவியர் ஆகமத்தில் இருந்து தெளிவாகின்றது. மக்களும் அவர்களின் சொத்துக்களும் உடமைகளும் நிலபுலமும் விடுதலை பெறுவது யூபிலி ஆண்டில் இன்றியமையாததாகின்றது. மக்களுக்கும் உடமைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் வழங்கப்படவேண்டிய ஆண்டாக இந்த யூபிலி ஆண்டு திகழ்கிறது. இசை 61: 1, 2 இலும் எசேக் 46: 17 இலும் இறைவாக்கினர்கள் யூபிலி ஆண்டு ஒரு விடுதலையின் ஆண்டு என்று வலியுறுத்துவதைக் காணலாம்.

## ஒரு நீதியின் ஆண்டு:

ஏற்கனவே வழங்கப்பட்ட கடன்களை மன்னித்து, வாடகைக்கு குத்தகைக்குப் பெறப்பட்ட காணிகளை, சொத்துக்களை அதனதன் உரிமையாளருக்கு திருப்பி வழங்குவதன் மூலம் அங்கு நீதிநிலை நாட்டப்படுகிறது. சிலரே எப்போதும் செல்வந்தராகும் நிலையைத் தவிர்த்து எல்லோரும் சமத்துவத்துடன் வாழ இந்த யூபிலி ஆண்டு உதவுகிறது.

## ஒரு படைப்பின் ஆண்டு:

யூபிலி ஆண்டானது படைப்புப் பொருட்களுக்கும் மனிதருக்கும், மிருகங்களுக்கும் ஓய்வு வழங்குகிறது. இதனால் இது முழு உலகையும் கௌரவித்து அதனுடைய சமநிலையைப் பேண உதவுகின்ற ஒரு ஆண்டாகத் திகழ்கின்றது.

## ஒரு புனித ஆண்டு:

"யூபிலி ஆண்டு புனித ஆண்டு" என்றும் (லேவி 25:12) அந்த ஆண்டில் கடவுளுக்கு அஞ்சி நடக்கவேண்டுமென்றும் (லேவி 25:17) கடவுளின் நியமங்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் (லேவி 25: 18) வலியுறுத்துகின்றது. இதிலிருந்து இவ்வாண்டானது இறைவனை ஆராதிக்கவென ஒதுக்கப்பட்ட ஒரு ஆண்டாகத் திகழ்கிறது.

## இஸ்ராயேல் வரலாறும் யூபிலி ஆண்டும்:

பழைய ஏற்பாட்டில் தோறா என்று அழைக்கப்படுகின்ற சட்டப்புத்தகத்தில் கடவுள் ஏற்படுத்திய யூபிலி ஆண்டு பற்றியும் அந்த ஆண்டில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு பற்றியும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் சட்டநூலில் உள்ள யூபிலி ஆண்டைப் பற்றிய விதிமுறைகள் எந்தளவுக்கு எபிரேய மக்களிடையில் கடைப்பிடிக்கப்பட்டது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் வரலாற்று நூல்களைப் புரட்டிப் பார்க்கும் போது சட்ட நூல்களில் இடம்பெற்ற யூபிலி ஆண்டு பற்றிய ஒழுங்குகள் கடைப் பிடிக்கப்பட்டதற்கான எந்தவொரு அறிகுறியும் ஆதாரமும் காணப் படவில்லை. மக்கள் இந்த ஒழுங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்த தாகத் தெரியவில்லை. இதிலிருந்து யூபிலி ஆண்டும் அதற்குரிய விதி முறைகளும் சட்டநூலின் ஒரு பகுதியாக இடம்பெற்றவையே தவிர அது கடைப்பிடிக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. "எபிரே யரின் யூபிலி ஆண்டு அதன் முழுப் பொருளிலும் ஒரு பொழுதும் கடைப்பிடிக்கப்படவில்லை என்றே தெரிகின்றது."

## இறைவாக்கினர் பார்வையில் யூபிலி ஆண்டு:

இறைவாக்கினர் காலத்தில் அவர்கள் இந்த யூபிலி ஆண்டு பற்றி பல்வேறு நிலைகளில் பேசுவதைக் காணக்கூடியதாக உள்ளது. இறைவாக்கினர் எசேக்கியேல் யூபிலி ஆண்டை "விடுதலை ஆண்டு" (எசே. 46: 17) என்று அழைக்கின்றார். இறைவாக்கினர் இசையாஸ் யூபிலி ஆண்டை "அருள்தரும் ஆண்டு" (இசை. 61: 2) என்று அழைக்கின்றார். இவற்றிலிருந்து இறைவாக்கினர்கள் யூபிலி ஆண்டை யும் அது தரும் விடுதலையையும் அருளையும் வற்புறுத்தி வந்தனர் என்பது தெளிவாகின்றது. சுருங்கக் கூறின் இறைவாக்கினர் காலத்தில் மீண்டும் யூபிலி ஆண்டுபற்றிய கருத்துக்கள் மக்கள் மத்தியில் எடுத் துரைக்கப்பட்டது. எல்லா இறைவாக்கினர்களும் விடுதலைக்கும் அருளுக்கும் அடிப்படையாகிய கடவுள் - மனித உறவு, அன்பு, சமூக நீதி, நேர்மை, இறைவிசுவாசம், சகோதரத்துவம், இறைவனுக்கு பிரமாணிக்கம், மக்கள் மத்தியில் புரிந்துணர்வு முதலிய விழுமியங் களை எடுத்துக்கூறி அவற்றினூடாக யூபிலி ஆண்டின் விதிமுறைகளை அமுல்படுத்த முயன்றுள்ளனர் என்பது இறைவாக்கினர்களின் ஏடுகளி லிருந்து தெரியவருகின்றது.

## இயேசுவில் நிறைவுறும் யூபிலி ஆண்டு:

யூபிலி ஆண்டு பற்றிய ஒரு தெளிவான குறிப்பு புதிய ஏற்பாட்டில் லூக்கா நற்செய்தியில் காணக்கிடக்கின்றது. "ஆண்டவ ருடைய ஆவி என்மேல் உள்ளது... ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பியுள்ளார்... நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" (லூக். 4; 18—21) இந்தப் பகுதியில் யூபிலி ஆண்டு பற்றியும் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகள் பற்றியும் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. 19ஆம் வாக்கியமும் "அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும்[3]" 21ஆம் வாக்கியமும் "நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று" இங்கு குறிப்பாக நோக்கப்பட வேண்டியதாகும். இயேசு மனுவுரு எடுத்ததன் நோக்கம் இங்கு இரத்தினச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது மனிதனாக இவ்வுலகிற்கு வந்த இறை மகன் இயேசு இறைவாக்கினர்கள் வலியுறுத்திய யூபிலி ஆண்டின் பாரம்பரியத்தை, அதன் முக்கியத்துவத்தை மீண்டும் வலியுறுத்தி அது தன்னிலே நிறைவு பெறுவதாக எடுத்துக் கூறுகின்றார்.

யூபிலி ஆண்டு விதிமுறைகள் அதன் விடுதலை, மகிழ்ச்சி, அதன் தன்மைகள் எல்லாம் இயேசுவின் காலத்தில் இடம்பெறுவதை நாம் வரலாற்றில் காண்கிறோம். இயேசுவின் ஒவ்வொரு செயலும், புதுமையும், ஏன்? அவரது முழு வாழ்வுமே அருள்தரும் ஆண்டை வெளிப்படுத்துவதாகவே இருந்தது. ஆக மொத்தம் பழைய ஏற்பாட்டு சட்டநூலில் உள்ள யூபிலி ஆண்டுபற்றிய விதிகள், இன்னும் இறை வாக்கினர்கள் அறிக்கையிட்ட யூபிலி ஆண்டின் செயல்கள் எல்லாம் இயேசுவின் காலத்தில் நிறைவேறுவது தெளிவாகத் தெரிகிறது.

"இயேசு தாம் மானிடத்தின் விடுதலைக்காக அழைக்கப்பட்ட தாகச் சொல்கிறார். இதில் யூபிலியின் விடுதலையையும் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். அதாவது எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், அடிமைகள், கைதிகள், ஒடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு விடுதலை வழங்கும் ஆண்டாகவும் யூபிலி ஆண்டு அமைகின்றது. அத்தோடு இவ்விடுதலையில் நோயிலிருந்து சிறப்பாக, கண்பார்வையற்ற நிலையி லிருந்து விடுதலை வழங்குவதும் இந்த யூபிலி ஆண்டுப் பணியில் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனெனில் பார்வையிழந்த நிலை ஒருவரின் தனித்துவத்தை இழக்கச் செய்கின்றது. இவ்வாறு இயேசு தமது நற்செய்தி அறிவிப்பு மற்றும் போதனைப் பணியின் முக்கிய நோக்கங் களை கோடிட்டுக் காட்டுகின்றார். அத்தோடு அவர் இம்மண்ணுல, கிற்கு வந்தது, ஆண்டவர் அருள்தரும் ஆண்டு, அதாவது யூபிலி ஆண்டை, புனித ஆண்டை அறிவிக்கவுமே என்பதை உறுதிப்படுத்து கின்றார்.[4]

## எமது வாழ்விற்கு:

யூபிலி ஆண்டைப் பிரகடணப்படுத்திய திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் "3ஆம் ஆயிரம் ஆண்டு வரும் வேளையிலே" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைத்தூது திருமுகத்திலே ''இயேசுவே திருச்சபையின் மையம். அடிஅத்திவாரம்—மனிதவரலாற்றின் அச்சாணி'' என்பதைத் தெளிவு படுத்தி மனுக்குலம் முழுவதும் மீண்டும் இயேசுவிடம் செல்லவேண்டும், அவரை மீட்பராகக் கண்டுகொள்ள வேண்டும் என்று வலியுறுத்து கின்றார். [5]

மேற்குறிப்பிட்ட இலக்கையடைய நாம் ஆதித்திருச்சபை வாழ்வை சற்று உற்று நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆதித் திருச்சபை பற்றிய திருத்தூதர் பணி வாசகங்கள் (2: 42–47, 4: 32–37) எமக்கு முன்மாதிரிகையாகவும், அதேவேளை சவாலாகவும் உள்ளது. ''அவர்களுடைய வாழ்வு அன்பிலும் விசுவாசத்திலும் வாழ் கின்ற சமூகத்தை உருவாக்குவதாக இருந்தது.

01. விசுவாசம்: உயிர்த்த இயேசுவை தன்வாழ்வில் அனுபவித்தல்.

02. அன்பு: சகோதர அன்பிலும், பகிர்விலும் வெளிப்படுதல்'' [6]

இவ்வாதித் திருச்சபையின் வாழ்வை மையமாக வைத்து நாமும் அதைப் பின்பற்றவேண்டும் அப்பொழுதுதான் நாம் திருச் சபையும், திருத்தந்தையும் விரும்புகின்ற அர்த்தமுள்ள கிறிஸ்தவ குழுமங்களை கட்டியெழுப்புவதன் மூலம், எம்மை யூபிலி ஆண்டிற்கு தகுந்த முறையிலே ஆயத்தம் செய்துகொள்ள முடியும். அதற்கு ''கிறிஸ்தவர்கள் மனம்மாறவேண்டும் கிறிஸ்தவ சமூகம் பாவத்தளைகளி லிருந்து விடுபட்ட சமூகமாக, ஒப்புரவின் சமூகமாக மாறவேண்டும், திருச்சபையின் நற்செய்தி அறிவிக்கும்பணி இதுதான்''. [7] இதை நாம் கீழ்வரும் செயல்களால் அடைய முயற்சிக்கலாம்.

## 1. தனிமனித மனமாற்றத்தின் மூலமாக...

ஒவ்வொரு மனிதனும் அடிப்படையில் தனது உள்ளத்தில் ஒரு மனமாற்றம் பெறவேண்டும். சிந்தனை, சொல், செயல் எல்லா வற்றிலும் ஓர் ஆழமான மனமாற்றம் வேண்டும். புதிய மனிதர்களாக புதிய உள்ளம் கொண்டவர்களாக நாம் மாறவேண்டும். ஆகமொத்தம் நாம் எல்லோரும் புதுப்பிக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்ட மக்களாக, கிறிஸ்தவர்களாக வாழவேண்டும் என்பதாகும்.

## 2. சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிரிவினைகளையும் நீக்குவதன் வழியாக...

இன்று சமூகங்களிடையே பல்வேறுவிதமான ஏற்றத்தாழ்வுகள், போட்டிகள், பிரிவினைகள் இருப்பதை நாம் அறிவோம். இவற்றி லிருந்து கிறிஸ்தவர்களாகிய நாம் விடுதலைபெறல் வேண்டும், இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் நிலவும் பிரிவினைகளைக் களைய முயற்சியெடுத்து அதனால் வரும் சவால்களை நாம் ஏற்கத் துணியவேண்டும். இதற்கு அடிப்படையாக அமைவது ''கடவுள் மனிதனை தனது சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார்'' (தொட. நூல் 1: 26) என்பதாகும். எனவே கிறீஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நாம், ஒவ்வொரு மனிதனையும் இறைசாயலாகக் கண்ணுற்று சமூகத்திலே பிரிவினைகளை அகற்றி ஒருவரையொருவர் ஏற்று அன்புச் சமூகமாக வாழவேண்டும் என்பதாகும்.

## 3. எல்லா நிலைகளிலுள்ள அநீதிகளை அகற்றுவதன் மூலமாக...

இன்றைய உலகில் நீதி மறைத்து கொண்டும், அநீதி வளர்ந்து கொண்டும் இருப்பதை நாம் உணரலாம். எந்த இடத்திலும் எந்தத் தொழிலிலும், எந்தச் சமூகத்திலும் அநீதிகள் இல்லாமல் இல்லை, என்று சொல்கின்ற அளவிற்கு நீதி குறைந்து செல்கின்றது. நீதியை நேசித்து நீதிக்காக உழைக்கின்றவர்கள் அருகி வருகின்றார்கள். இந்த வேளையில் நாம் நீதிக்காகக் குரல்கொடுத்து அது எல்லாச் சமூகத்திலும் நிலவச்செய்ய வேண்டும். கிறீஸ்தவர்களாகிய நாம் இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் உலகில் உள்ள அநீதிகளை அகற்றமுடியும்.

## 4. கிறீஸ்தவச் சபைகளிடையேயுள்ள பிணக்குகளைப் போக்குவதன் வழியாக...

''அவர்கள் எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக'' (யோவா. 17: 21) என்று வேண்டி இயேசு ஆரம்பித்த திருச்சபையானது பல்வேறு அரசியல், சமூகக் காரணங்களால் பிளவுபட்டு பல குட்டிக் குட்டித் திருச்சபைகளாக உள்ளது. இது கிறீஸ்துவின் சித்தத்திற்கு முரணானது. யூபிலி ஆண்டிற்கு ஆயத்தம் செய்யும் நாம் இதைக் கருத்திற்கொண்டு பிளவுபட்டுள்ள திருச்சபைகள் ஒன்று சேர உழைக்க வேண்டியவர்களாகின்றோம்.

## முடிவுரை:

யூபிலி ஆண்டிற்கு பல ஆயத்தங்களை செய்துவரும் இவ்வேளையில் நாம் மீண்டும் ஒருமுறை இயேசு மனுவுருவான நிகழ்ச்சியை நினைவுகூர்ந்து சிந்திக்க ஒருகாலம் தரப்படுகின்றது. இந்தக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யூபிலி ஆண்டு எமக்குத் தரும் விஷேட அழைப்பைக் கண்டுணர்ந்து கொள்ளவேண்டும். எம்மை நாம் இந்த யூபிலி ஆண்டிற்கு ஆளமான முறையிலே தயார்படுத்திக்கொள்ளவேண்டும். அந்தவகையில் மேற் கூறிய நான்கு விடயங்களையும் சற்று ஆழமாக நாம் உள்வாங்கி, எம்வாழ்வை புதுப்பித்துக்கொள்ள முன்வரவேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. Oscar Battaglia, தமிழாக்கம் – திரேசா ம. ஊ. ச, "மாபெரும் யூபிலி ஆண்டு 2000" மாநிலச் செயலகம், தமிழ் நாடு 1997, பக். 8, 10.

2. "யூபிலி ஆண்டு-2000", யாழ். திருவழிபாட்டு நிலைய வெளியீடு, cf பக். 2, 3.

3. "மாபெரும் யூபிலி ஆண்டு-2000" OP.cit...... பக். 18.

4. Ibid. பக். 21.

5. "யூபிலி அறைகூவல்" தோழன், ஏப்ரல்–1998 cf பக். 22.

6. Ibid. பக். 23.

7. Ibid. பக். 22.

உசாத்துணை நூல்கள்


1. Oscar Battaglia, தமிழாக்கம் திரேசா ம. ஊ ச. "மாபெரும் யூபிலி ஆண்டு 2000," மாநிலச் செயலகம், தமிழ்நாடு, 1997.

2. "யூபிலி அறைகூவல்" – தோழன், ஏப்ரல் - 1998.

3. "இயேசுவின் பார்வையில் யூபிலி" – தோழன், ஏப்ரல் - 1998.

4. "யூபிலி ஆண்டு - 2000" – யாழ் திருவழிபாட்டு நிலைய வெளியீடு.

5. Apostolic letter; "Tertio millennio adveniente" by John Paul - II




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து ஏன் பிறந்தார்?

## (வரலாறுசார் இறையியல் பார்வை)

அருட்சகோ. எஸ். எயின்சிலி றொஷான்
புனித சவேரியார் குருத்துவ கல்லூரி.
3ஆம் ஆண்டு இறையியல்

நீண்டகாலப் போரின் விளைவுகள் பலவற்றிற்கு முகம் கொடுத்து வாழ்வின் பல்வேறு நிலைகளில் பலவற்றை இழந்து வாழ்வின் பொருளைக்கூட அறியாது, நம்பிக்கையற்று வாழும் தமிழ் கத்தோலிக்க சமூகத்திற்கு கிறிஸ்துவின் பிறப்பு இன்றும் ஒரு கேள்விக் குறியாகவே அமைகின்றது.

இந்நிலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து ஏன் பிறந்தார் எனக் கேட்பதும், அதனூடாக இன்றும் எமக்குக் கிடைக்கும் இறையியல் சிந்தனைகள் யாவை என்பதைச் சிந்திப்பதும் பொருத்தமே! அவ்வகையில் இச் சிறிய ஆய்வுக் கட்டுரை மூலம் வரலாற்றில் கிறிஸ்து பிறப்பு விழா எவ்வாறு ஆரம்பித்தது என்பதையும், அவரின் மனித அவதாரத்தின் இறையியல் சிந்தனைகள் சிலவற்றையும் இங்கு ஆராய்கின்றேன்.

### வரலாற்றில் கிறிஸ்து பிறப்பு விழா (கிறிஸ்மஸ்).

"கிறிஸ்மஸ்" கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விழாவாகும். இவ்விழாவை "கிறிஸ்து பிறப்பு விழா" என அழைக்கின்றோம். இவ்விழாவானது மேற்குத் திருச்சபையில் ஆரம்பமானது. கி. பி. 336 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவானது மார்கழி மாதம் 25 ஆம் நாளில் மேற்குத் திருச்சபை வாழ் கிறிஸ்தவர்களினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. இக்காலப்பகுதியில் உரோமையர் "வெற்றிபெற முடியாத சூரியனின் பிறப்பு நாளையும் பேரரசன் அவுரேலியுவின் பிறப்பு நாளையும் கொண்டாடி வந்தனர். காலப் போக்கில் உரோமையர் இதற்கு மாற்றாக கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிற்கு சக்தியாகவும் உலகின் இருளுக்கு ஒளியாகவும் விளங்கிய சூரியனுக்கு விழா எடுத்த மக்கள், தமது இருள் சூழ்ந்த உள்ளத்திற்கு ஒளியாகவும் உலகின் அடிமைத்தனத்திற்கு விடிவிளக்காகவும் வந்துதித்த கிறிஸ்து பெருமானுக்கு விழா எடுக்க ஆரம்பித்தமை சாலப்பொருத்தமே. இவ்வாறு சூரிய வழிபாடு கிறிஸ்து பிறப்பு விழாவாக உருவெடுத்தது.

" அலெக்ஸ்சாந்திரியாவிலும் கிழக்குத் திருச்சபைகளிலும் தொடக்கத்தில் இயேசுவின் பிறப்பு, இயேசுவின் திருமுழுக்கை நினைவுபடுத்தும் திருக்காட்சி விழாவுடன் சேர்த்து தைத்திங்கள் 6 ஆம் நாள் கொண்டாடப்பட்டது. கிழக்குத்திருச்சபையின் சில பிரிவுகள் இன்றும் இந்நாளிலேயே இயேசுவின் பிறப்பைக் கொண்டாடுகின்றன "[1].

வரலாற்றில் கிறிஸ்மஸ் என்று ஆராய்கின்ற போது இச் சொற்பதத்தைச் சற்று விளங்கிக் கொள்வதும் அவசியமாகின்றது. " கிறிஸ்துமஸ்" என்ற வார்த்தை " கிறிஸ்தேஸ் மேஸ்ஸே " என்ற வார்த்தையில் இருந்து வந்தது, இந்தப் பழைய ஆங்கில வார்த்தையின் பொருள் ' கிறிஸ்துவின் திருப்பலி ' ஆகும் "[2]. கிறிஸ்துமஸ் என்ற பெயர் புதிய ஏற்பாட்டிலோ அன்றேல் புதிய ஏற்பாட்டுக் காலப் பகுதியிலோ காணப்படவில்லை.

மேற்குத் திருச்சபை வழிபாட்டில் தந்தையின் உள்ளத்திலிருந்தும், மரியாளின் உதரத்திலும் விசுவாசிகளின் ஆன்மாக்களிலும் இயேசு பிறக்கும் முப்பிறப்பைக் குறிக்கும் முறையில் மூன்று திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டு வந்தன. "[3] இப் பாரம்பரியக் கருத்தை வெளிக்கொணரும் சொல்லாகவே " கிறிஸ்துமஸ் " என்ற சொல் அமைகின்றது.

## இறைவெளிப்பாடாக கிறிஸ்து

எங்கும் அமைதி எதிலும் அமைதி; வளங்கள் நிறைந்து பூமி எங்கும் செழித்திருந்தது. இறைவன் மனிதனுடனும், மனிதன் இறைவனுடனும் ஒன்றித்திருந்த காலம் அது. இறை மனித உறவின் காரணமாக தீமையின்றி பூமி செழித்து அமைதியை அளித்துக்கொண்டிருந்தது. படைப்புக்களின் காரணகர்த்தாவாகிய இறைவன் தனது படைப்புக்களின் சிறப்பைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான். ஆதி மனிதன் இறைவனின் வியத்தகு செயல்களைக் கண்டு அவரைப் புகழ்ந்து கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் ஆதி மனிதன் இழைத்த தவறால்—இறைவன்—மனிதன்-உலகம் என்ற முக்கூட்டு உறவு உடைந்தது. தீமை (பாவம்) உலகிற்குள் நுழைந்தது. முன்பிருந்த அமைதி நிலை குலைந்தது. அந்த இன்ப நிலையை மனிதன் அடைவதற்கு அவன் மீண்டும் உருமாற வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டது. ஆனால் இது இறையருளை இழந்து விட்ட மனிதனால் இயலாததொன்று. இங்குதான் கிறிஸ்துவின் பிறப்பும், உயிர்ப்பும் (இறப்பும்) அவசியமாகிறது. மானிடரின் இவ்வுலகின் ஏக்கம் தீர ஆதியிலே கடவுளோடு இருந்த கடவுளாக இருந்த (யோவான் 1 : 2) வார்த்தை மரியாளின் வயிற்றில் மனித அவதாரம் எடுத்தார்.

இன்றைய நாளின் நிகழ்ச்சி நாளைய நாளில் வரலாறு ஆகின்றது. அப்படியானால் நேற்றைய நிகழ்ச்சி இன்றைய வரலாறு. எனவே வரலாற்றை நேற்றோ அதற்கு முன்போ கடந்த நிகழ்ச்சிகளின் தொகுப்பாகக் காண்கின்றது உலகம். இவ்வகையில், கிறிஸ்துவின் வருகையும் ஒரு வரலாறே! அது மீட்பின் வரலாறு. இம் மீட்பின் வரலாற்றில் இயேசு தான் வாழும் முன்னரே வரலாறு படைக்கின்றார். "இறைவன் தம்மையும் பாவ உலகில் சிக்குண்டு தவித்த மனிதனுடைய மீட்பின் திருவுளத்தின் நித்திய முடிவுகளையும் அறிவிக்க விரும்பினார். தமது திட்டத்தை உலகப் படைப்புக்களின் வழியாக (தொ. நூ. 1 : 1) ஆபிரகாமின் அழைப்பின் வழியாக (தொ. நூ. 12 : 1 – 2), இஸ்ராயேல் மக்களோடு சீனாய் மலை தன்னிலே செய்து கொண்ட உடன்படிக்கையின் வழியாக (வி. ப 24) இறைவாக்கின் வழியாக வெளிப்படுத்தினார். இந்த வெளிப்பாடு இயேசுவின் வருகையிலே உச்சக்கட்டத்தை அடைகின்றது"4 இங்கு வார்த்தை மனுவுரு எடுத்து இறை வெளிப்பாடாக நம்மிடையே இயேசுவாக குடிகொள்கின்றார்.

## அமைதியின் அரசராக கிறிஸ்து

கிறிஸ்து ஏன் பிறந்தார்? அவரின் பிறப்பின் உள்ளார்ந்த செய்தி என்ன? என ஆய்கின்ற போது, இதற்கான விடையை விவிலியத்தில் ஆராய்தலும் பொருத்தமே. ஏசாயா இறைவாக்கினர் இறைமகன் இயேசுவின் பிறப்பை முன்னறிவிப்பதைக் காண்கின்றோம். "ஆண்டவர் தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார்." இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பாள்; அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள். "தீமையைத் தவிர்த்து நன்மையை நாடித் தேர்ந்து கொள்வதற்கு அறியும்போது அவன் வெண்ணையையும் தேனையும் உண்பான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( எசா. 7 : 14 - 15 ). மேலும் காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண் மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர் வலிமை மிகு இறைவன், என்றுமுள தந்தை. அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும். அவரது ஆட்சியின் உயர்வுக்கும் அமைதி நிலவும், அவரது அரசின் வளர்ச்சிக்கும் முடிவு இராது; தாவீதின் அரியணையில் அமர்ந்து தாவீதின் அரசை நிலைநாட்டுவார். இன்று முதல் என்றென்றும் நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி புரிந்து அதை நிலைபெயராது உறுதிப்படுத்துவார் ( எசா 9 : 2, 6-7 )

அமைதியின் அரசர், வியத்தகு ஆலோசகர் என்றெல்லாம் இறைவாக்கினரால் முன்னுரைக்கப்பட்ட கிறிஸ்து மக்களுக்கு வாழ்வளிக்க மண்ணில் உதித்தார். புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி எனத் தோன்றிய இயேசு தமது பாடுகள், மரணம் உயிர்ப்பின் ஊடாகத் தந்த கிறிஸ்தவ விசுவாசம், மீட்பின் பரவல் தன்மையையே வெளிக்காட்டுகின்றது. உலக மக்கள் அனைவரும் மீட்புப் பெறுதலையே நோக்கமாகக் கொண்டுவந்தார் கிறிஸ்து பெருமான். புலம் பெயர்ந்த ஒரு குடும்பம், அடிமையுற்ற ஒரு இனம், ஒதுக்கப்பட்டோர், வாழ்விழந்தோர், சிறைவைக்கப்பட்டோர், காணாமற் போனோர், இவர்களை மீட்பதற்காகவே பிறந்தார் என்ற உண்மைகளைக் கிறிஸ்து பிறப்பு நிகழ்ச்சி எமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

மக்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் விடுதலையையும் கொணரவே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறிஸ்து மனிதனானார் என அறிக்கின்றோம். அவர் கொண்டுவந்த சமாதானம் உலகில் காணவில்லையே அமைதியை, விடுதலையை தற்கால சமூகம் அனுபவிக்கவில்லையே என்ற ஆதங்கம் எம் அனைவருக்குமே தோன்றலாம். "நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போலன்று" (யோவா 14: 2) என அழுத்தமாக கூறுகின்றார் இயேசு. வரப்போகும் மெசியாவை அமைதியின் மன்னன் என எசாயா முன்னறிவித்தார். இச்சமாதானத்தைத் தருவதற்காகத்தான் இயேசு உலகில் பிறந்ததாக வானவர்கள் பெத்தலகேமில் பாடினார்கள். துன்பமும், துயரமும் இடம்பெயர்வும், போரும், பூசலும் இல்லா நிலையே சமாதானம்' என்று உலகம் கருதுகின்றது. இயேசு அளிக்கும் சமா 'தானம் மீட்பளிக்கும் உள்ள அமைதியாகும். இச்சமாதானத்தை உலகம் அனுபவிக்க வேண்டுமானால் தனிமனிதன் தனது உள்ளத்திலே முதலில் உணரவேண்டும். தனி மனிதனின் மனமாற்றம் தான் உலக அமைதிக்கு வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புருவாக இறைமகன் இயேசு

பழைய ஏற்பாட்டிலே இறைவனை நீதியும் தண்டனையும் அளிக்கும் இறைவனாகக் கருதினார்கள். புதிய ஏற்பாட்டிலே மனித அவதாரம் எடுத்த இறைவன் விண்ணரசின் மதிப்பீடுகளான அன்பு, இரக்கம், கருணை, குணமாக்கல் என்பவற்றை ஆரம்பித்து வைக்க வந்தார் என்பது உண்மை. பணக்காரர்களே கடவுள் அருள் பெற்றவர்கள், ஏழைகள் கடவுளின் சபாத்தைப் பெற்றவர்கள் என்ற அக்காலக் கருத்தினை அறவே மாற்றி, எளிய மனத்தோரும், துயருறுவோரும், ஏழைகளுமே பேறுபெற்றோர் என்று உரைத்து, ''ஊசியின் காதின் ஒட்டகம் நுழைவதை விடப் பணக்காரர் விண்ணரசில் நுழைவது கடினம்'' (மத். 19: 24) என்று கூறி அன்பிற்கு வடிவம் கொடுத்தார். ''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' என்பது புதிய சமுதாயம் படைப்போரின் முழக்கமாக இருந்தது. கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பவர் யாவரும் தம் தாயும் சகோதரரும் ஆவர் என்று ஏற்றத்தாழ்வற்ற புதியதோர் அன்புச் சமூகத்திற்கு வித்திட்டு அன்பிய வாழ்வு வாழ அழைப்பு விடுத்தார் இயேசு.

இயேசுவின் இறையரசில் பணம், பதவி, பலம், ஆளுதல் இவற்றிற்கு கடுகளவும் இடமில்லை; உண்மை, அன்பு, தியாகம் பணிவிடை ஆகிய பண்புகளுக்கே அங்கு இடமுண்டு. அன்பே இறையரசின் மையம், பிறர் நலத் தொண்டே அதன் அடித்தளம். இவை போன்றவற்றிற்காகத் தன்னையே அர்ப்பணிக்கும் தியாக உள்ளத்தையே இறைமக்களிடம் எதிர்பார்க்கின்றார் இயேசு. மனிதன் மனிதனாக சுதந்திரம் பெற்ற முழு மனிதனாக வாழவேண்டுமெனில், உண்மை, அன்பு, நீதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வாழ்வை அவன் தன் உள்ளத்திலே உருவாக்கல் அவசியம். அமைதியும் சமாதனமும் நம் மத்தியில் மிளிர வேண்டுமானால் அன்புருவான இயேசு எம் உள்ளங்களில் பிறக்கவேண்டும்.

## முடிவாக

உண்மையில் நாம் கிறிஸ்து வழிவந்து அவரைப் பின்பற்றுபவர்களாயின் நமது ஒவ்வொரு துளி இரத்தத்திலும் கிறிஸ்து கலந்திருக்க வேண்டும். ஒவ்வொரு இதயத்துடிப்பிலும் அவர் எதிரொலிக்க வேண்டும். நம் உள்ளத்தில் அவர் குடிகொள்ளவேண்டும். ''கிறிஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தது ஏன்?" எனச் சிந்தித்து விடைகாண விழையும் இவ்வேளையில் கிறிஸ்து மனிதரனைவருக்கும் முழுமையான வாழ்வு அளிக்கவே வந்தார் என்பதை உணர்ந்துகொள்வோம்.

இரண்டாயிரம் ஆண்டு யூபிலி விழாவிற்கு எம்மைப் பண்படுத்தும் இக்காலத்தில் உலகில் உரிமைக்குரல் எழுப்ப, புறக்கணிக்கப்பட்டோருக்குப் புனர்வாழ்வு கொடுக்க, அநீதியையும் அட்டூழியத்தையும் அழித்தொழித்து அமைதியையும், சமாதானத்தையும் அருளவே ஆண்டவன் கிறிஸ்து அவதரித்தார் என்னும் உண்மையை எமது வாழ்வாக்க முயல்வோம்.

அடிக்குறிப்புக்கள்,

1. தியாகு, "கிறிஸ்மஸ்", விவிலியக் களஞ்சியம் (II), விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை, 1991

2. பா. சேவி, "கிறிஸ்து பிறப்பு", தோழன், நவம்பர் – டிசம்பர் 1979, ப. 509.

3. PAUL J. Achtemeier, (Ed), "Horper's Bible Dictionary," T. P. I. Bangalore, 1996, P. 163.

4. WALSH, Michael, J. (CEd), Commontary on the Catechism of the Catholic Church, Article.

"The Mysteries of Jesus Christ" T. P. I. 1994, P. 103.

ஏனைய உசாத்துணை நூல்கள்:

RAYMOND E. BROWN, "The Birth of the Messiah", Doubleday and Company, I. N. C. New York, 1979.

EDWARD SCHILLEBEECKX, "Jesus", University Press, London, 1983.

கிறிஸ்துவில் நான், அவரில் வளர்வோம் நூல் வரிசை (II), விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம், (இந்தியா) 1994.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணில் உதித்த ஒளி

இ. ம. ஜெயசீலன்
மறையாசிரியர்
பருத்தித்துறை மறைக்கோட்டம்

கிறிஸ்து இயேசுவின் பிறப்பின் 2000-ம் ஆண்டு மாபெரும் யூபிலிக்கு அன்னையாம் திருச்சபை தயார் செய்கின்றது. வரலாற்றை வகுத்த கிறிஸ்துவின் பிறப்பு நாளை உலகில் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் அனைவரும் குதூகலத்துடன் கொண்டாடுகின்றார்கள். உள்ளத்தில் அமைதி இழந்து துன்பதுயரங்கள், இடம்பெயர்வுகள் மத்தியில் வாழும் மக்களுக்கு விடுதலை வாழ்வு வழங்கும் கிறிஸ்துவின் பிறப்பு விழா மகிழ்ச்சியான விழாத்தான்.

இயேசுவின் பிறப்புப்பற்றி இரு நற்செய்தியாளர் கூறுகின்றனர். நற்செய்தியாளர் லூக்கா இயேசுவை வரலாற்று நாயகனாகக் காட்டி நிற்கின்றார்.

## தாவீதின் ஊரில் இயேசு

தம் பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். " தாவீதின் மரபினரான யோசேப்பும் தமக்கு மண ஒப்பந்தமான மரியாளோடு, பெயரைப் பதிவு செய்ய கலிலேயாவில் உள்ள நாசரேத்து ஊரில் இருந்து யூதேயாவில் உள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றனர் " (லூக் 2:3–5). அக்காலத்தில் உரோமையரின் வழக்கப்படி மக்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்ய தத்தம் சொந்த ஊருக்குத்தான் செல்லவேண்டும். எகிப்தில் கிடைத்த ஒரு "பப்பிரஸ்" ஓலைச்சுருள் இத்தகைய பழக்கத்திற்கு சான்று பகர்கின்றது. எகிப்திலே நடத்தப்பட்ட ஓர் உரோமைய கணக்கெடுப்பு பற்றி விபரிக்கும் இந்த சுருள் திருமணமான பெண்களும் கணக்கெடுப்பில் பதிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. எனவே யோசேப்பும் தம் சொந்த ஊராகிய யூதாவின் பெத்லகேம் என்னும் ஊருக்குச் சென்றார். ( காண். 1 சாமு. 16:1 ). லூக்கா இதைத் தெட்டத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கெடுப்பு

ஏன் யோசேப்பும் மரியாவும் பெத்லகேம் சென்றனர் என்பதற்கு லூக்கா கூறும் காரணம் "அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன்படி சிரிய நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராய் இருந்த போது முதன் முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது" ( லூக். 2:1—2 ). அதனால் பெயரைப் பதிவு செய்யச் சென்றனர். இக் கூற்றை ஏற்றுக் கொள்வதில் சில முரண்பாடுகள் உள்ளன. யோசேப்புஸ் என்ற வரலாற்று ஆசிரியரின் கருத்துப்படி இக்கணக்கெடுப்பு கி. பி 6—7-ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பை யூதத் தீவிரவாதிகள் கலிலேயனான யூதாவின் தலைமையில் எதிர்த்தனர். ( தி. தூத. 5:37 ). எகிப்தில் பதினான்கு ஆண்டுகட்கு ஒரு முறை இவ்விதம் கணக்கெடுக்கப்பட்டதாக தெரிகிறது. அதன்படி கி. பி 6 இற்கு முந்திய கணக்கெடுப்பு கி. மு 8 இல் நடந்திருக்க வேண்டும். மேலும் கி. மு 9—10 இல் எகிப்திய மாகாணங்களில் உரோமையர் புதிய வரிகளை விதித்தனர் என்பதற்கு சான்றுகள் உள. கட்டளையிட்டவுடன் கணக்கெடுக்கப்பட வில்லை. சில காலம் சென்ற பின் தான் இக்கட்டளை செயல்படுத்தப்பட்டிருக்கலாம். அது மட்டுமல்ல இயேசு பெரிய ஏரோதின் ஆட்சிக்காலத்தில் பிறந்துள்ளார் (மத். 2:1). பெரிய ஏரோது கி. மு. 4 இல் இறந்து விட்டான். கணக்கெடுப்பிற்கு உறுதியான விடையில்லை.

சில அறிஞரின் கருத்துப்படி இக்கணக்கெடுப்பையும் இயேசுவின் பிறப்பையும் இணைக்க வேறு காரணங்கள் உண்டு. இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்பதை விளக்கவும் அவரது பிறப்பு இஸ்ராயேல் வரலாற்றோடும் உலக வரலாற்றோடும் இணைக்கப்பட காலக்கணிப்பைத் தயாரித்த துறவி தவறுதலாக 4, 5 ஆண்டுகள் தவறுதலாக பின்தள்ளி கணித்துவிட்டார்.

## சத்திரத்தில் இடமில்லை

மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. அவர் தம் தலை மகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவருக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார் ( லூக் 2:7 ). இயேசு பிறந்தது மாட்டு தொழுவத்திலா? இங்கு ஓர் மொழிப் பிரச்சனையுள்ளது. விடுதி என்ற தமிழ் சொல்லுக்கு லூக்கா பயன்படுத்தும் கிரேக்க சொல் " கத்தலூமா " ( Kataluma ) என்பதாகும். இச் சொல் சுமைகளை இறக்கி வைக்க பயன்படும் ஓர் இடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் குறிக்கும். இவ்வாறு குறிக்கப்படுவது பயணிகள் தங்கும் முழு விடுதியையோ அல்லது ஓர் அறையையோ குறிக்கலாம். யூதர்களின் வீடுகள் தற்கால வீடுகள் போல் அல்ல, ஒரு சதுரமான பெட்டி போன்ற வடிவத்தில் தான் அவர்களது வீடுகள். வீட்டுக்குக் கீழ் அல்லது பக்கத்தில் குகை போன்ற அமைப்புடன் ஒரு பகுதி இருக்கும். அதில் தமது தட்டு முட்டு சமான்களை, ஆடுமாடுகளை வைத்திருப்பர். இப்படியான ஓர் இடத்தில் இயேசு பிறந்திருக்கலாம். ஏனென்றால் பல மக்கள் கணக் கெடுப்பிற்காக கூடியிருந்தபடியால் வீடுகள், விடுதிகள் நிறைந்திருந்தன. விடுதியில் சாதாரணமாக ஆட்கள் தங்கும் பகுதிகளில் மகப்பேறு நடைபெறுவதற்கு பொருத்தமான சூழலாக அமையக் கூடிய இடம் இருக்கவில்லை எனவும் கொள்ளலாம். எனவே வீட்டோடு இணைந் திருந்த மாடுகள், கழுதைகள் போன்ற வீட்டு விலங்குகள் நின்ற அந்த குகை வடிவ அறையிலே இயேசு பிறந்து தீவனத்தொட்டியில் கிடத்தப் பட்டார் எனவும் கொள்ளலாம்.

## ஆண்டவரின் மாட்சி ஒளிர்ந்தது

அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சி யூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். (லூக். 2 : 10) இயேசு பிறந்த செய்தி முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப்படுகின் றது. பெத்தலகேமை அண்டிய பகுதிகளிலும் யூதேயாப் பாலைவனத் தின் எல்லைப் பகுதிகளிலும் இக்காலத்தில் வாழும் " பெடுயினர் களை " (*Bedouin*) போல அக்காலத்தில் இடையர்களும் நாடோடிகள்' அவர்கள் பரந்த வெளியில் வாழ்ந்தனர். இடையர்கள் பல காரணங் களின் நிமித்தம் பொதுமக்களால் வெறுக்கப்பட்டனர். இவர்கள் நேர்மையற்றவர்கள் என்றும் கள்வர்கள் என்றும் சட்டம் கருதியது. யூதர்களின் நோக்கில் மந்தை மேய்ப்போர் அல்லது இடையர்கள் மிக மோசமான தொழில் செய்பவர்களாக 23 ஆம் திருப்பாடலுக்குரிய " மிட்றாஷ் " ( *Midrash* ) இக்கூற்றை அழுத்திக் கூறுகின்றது ஆடு மேய்ப்பவனின் தொழிலை விட கேவலமான தொழில் இல்லை. பிலோவும் ( *Philo* ) இதே பாணியில் இடையர்களைப்பற்றி எழுது கின்றார்.

இவர்களுக்குத்தான் இயேசுவின் பிறப்பு முதன் முதல் அறி விக்கப்படுகின்றது. இயேசு ஒடுக்கப்பட்டவர்களை மீட்க வந்தார். எனவே வானதூதரை அனுப்பி இடையர்களை அழைத்தார் இறைவன். இவர்கள் இறைவாக்கைப் படித்தோ ஞானிகளைப் போல் விண்மீன் களைக் கண்டோ வழிநடத்தப்பட முடியாதவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு தாவீதின் ஊரிலே பிறக்கின்றார். தாவீது சிறுவனாக ஆடு, மாடு மேய்த்தார். இறைவனால் அருள் பொழிவு செய்யப்பட்டு அரசராகினார். தாவீது தம் மக்களை வழிநடத்தும் உயர்ந்த மேய்ப்புப் பணிக்கு அழைக்கப்பட்டார். தாவீதின் மகனாகிய குழந்தை இயேசுவை வழிபட முதலில் வருபவர்கள் இடையர்களே!

காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் (ஏசா. 9 : 2). இந்த ஒளி இறைவனின் பிரசன்னத்தையும் அவரது வழிகளையும் குறிக்கும். இயேசுவின் பிறப்பின்போது இடையர்கள் ஒளியைக் கண்டனர் மக்கட்கெல்லாம் மீட்பை வழங்கும் ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்பதை உணர்த்தவே இயேசு பிறந்தபோது இடையர்கள் பேரொளியைக் கண்டதாக லூக்கா குறிப்பிடுகிறார் (லூக்.2.9).

இடையர்கள் தமக்கு வானதூதரால் அறிவிக்கப்பட்ட அடையாளத்தைக் காண்கின்றனர் (லூக். 2 : 11 – 12). இவர்கள் பிறப்பிற்கு நேர் சாட்சிகளாக விளங்குகிறார்கள். இடையர்கள் இயேசுவுக்கு விலையுயர்ந்த பொருட்களை வழங்கவில்லை. மாறாக இயேசு பிறந்த நற்செய்தியை எங்கும் அறிவித்தனர். இடையர்கள் தாம் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் பிறருக்கு அறிவித்தனர்.

இயேசுவின் அப்போஸ்தலர்கள் அறிவித்தது போல " நாங்கள் கண்டதை நாங்கள் கேட்டதை உங்களுக்கு அறிவிக்கிறோம்" (1 யோவா. 1 : 1 - 5). இடையர்களும் தாம் கண்டு கேட்ட அனைத்தையும் பிறருக்கு அறிவித்து கடவுளை மகிமைப்படுத்தி புகழ்ந்தார்கள்.

இயேசுவைக் கண்டவர்கள், கேட்டவர்கள் அவரை மற்றவர்களுக்கு அறிவிக்க கடமைப்பட்டவர்கள். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று திருமுழுக்கினால் அருள் பொழிவு செய்யப்பட்ட இயேசுவின் சீடர்களாகிய நாமும் நமக்கு அறிவிக்கப்பட்ட நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்போம்.

இன்று எம் வாழ்வில் பலவித துன்ப துயரங்கள், அவலங்கள் மத்தியில் வாழும் மக்கள் உண்மை, அமைதி, ஒளியை இயேசுவில் காண கிறிஸ்து பிறப்பு விழா வழிகாட்ட நாம் உழைப்போம்.

**உசாத்துணை நூல்கள்**

**JOACHIM JEREIAS, "Jerusalem in the time of Jesus", Philadelphia, 1969.**

தோழன், டிசம்பர். 1989. இந்தியா.

தியாகு, விவிலியக் களஞ்சியம், தியான ஆசிரமம், சென்னை, 1991.

கைப்பிரதி – அருட்திரு வ. மரியதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமகனை ஈன்றெடுத்த மறைபொருள் மரியா

அருள்திரு பீ. கிறிஸ்து நேசரட்ணம்
( தமிழ் நேசன் )
உதவி பங்குத் தந்தை
புனித செபஸ்தியார் பேராலயம்
மன்னார்

விண்ணகக் கடவுள் மண்ணகம் வரவேண்டுமாம்! அது எப்படிச் சாத்தியமாகும்? உருவில்லா இறைவன் கருவாக வேண்டுமாம்! அது எப்படி நடக்க முடியும்? சாத்தியமற்றது என்று கருதப்பட்டவை சாத்தியமாகியது. நடக்கமுடியாது என்று நம்பப்பட்டவை நடந்தேறியது. ஆம் புலன்களுக்கு எட்டாத கடவுளின் திட்டத்திற்குள் புகுந்திருந்த ஒரு பெண்மணியினால்தான் இவை சாத்தியமாகி நடந்தேறின. அந்தப்பெண்ணின் பெயர் மரியா. இந்தப் பெண் மரியா தான் விண்ணகக் கடவுள் மண்ணகம் வர விடை கொடுத்தவள், உருவில்லா இறைவன் கருவாகக் காரணமானவள்.

பாவத்தால் சிதைந்த மனுக்குலத்தை சீர்படுத்த இறைவன் எத்தனையோ வழிகளைக் கையாண்டிருக்கலாம். ஆனால் அந்த இறைவன் தேர்ந்தெடுத்த வழி அலாதியானது. ஒரு வகையில் புதிர்களும் சிக்கல்களும் நிறைந்த வழி. அது ஒரு மறை பொருளான வழியும் கூட. ஆம் ஒரு கன்னிப்பெண்ணின் வழியாக தன் மகனை இவ்வுலகில் தோன்றச் செய்ததே அவ்வழி. இயேசுவின் பிறப்பை மையமாகக் கொண்டு அப் பெண் மரியா பற்றி பல்வேறு கோணங்களில் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரைக்கப்பட்ட இறைவாக்கின் நிறைவேற்றம் மரியா

மரியா என்ற பெண் கடவுளுடைய நித்திய திட்டத்தில் நிலை பெற்றிருந்தாள். அவள் பற்றி முன்னுரைக்கப்பட்ட இறைவாக்குகள் பிற்காலத்தில் நிறைவேறியது. இந்த உண்மையை இரண்டாம் வத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கான் பொதுச் சங்கம் சுருக்கமாக இப்படி அறிக்கையிடுகிறது. "எவ்வாறு உலகிலே கிறிஸ்துவின் வருகை படிப்படியாகத் தயார் செய்யப்பட்டு வந்தது என்னும் மீட்பு வரலாற்றை பழைய ஏற்பாட்டு நூல்கள் விபரிக்கின்றன.''

தொன்மை வாய்ந்த இந்நூல்கள் திருச்சபையில் வாசிக்கப் பெற்று, பிற்காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளின் ஒளியில் உணரப்பெறும் போது மீட்பரின் தாயான ஒரு பெண்ணின் உருவைப் படிப்படியாக தெளிவாகக் காட்டுகின்றன. முதற் பெற்றோர் பாவம் புரிந்த பின் அலகையின் மேல் பெறும் வெற்றியைப் பற்றிய வாக்குறுதி அவர்களுக்கு அளிக்கப்பெற்றது. இவ்வாக்குறுதியில் மரியாள் இறைவாக்காக முன்னுருவகிக்கப் பெற்றதை மேற் கூறிய பிற்கால முழு வெளிப்பாட்டின் ஒளியில் நாம் காணலாம். (காண்க தொ. நூ 3 : 15). அதுபோல 'கடவுள் நம்மோடு' எனப் பெயர் பெறப் போகும் மகனைக் கருத்தாங்கிப் பெற்றெடுப்பாள் என்று கூறப் பெற்ற கன்னியும் இவளே''. (காண்க, எசா 7 : 14; மீக். 5 : 2 – 3; மத். 1 : 22 – 23) திருச்சபை எண். 55.

யோசேப்புக்கு கனவில் காட்சி கொடுக்கும் கடவுளின் தூதருடைய நிகழ்ச்சியைக் காட்டும் மத்தேயு நற்செய்தியாளர், பழைய ஏற்பாட்டு வார்த்தைகள் மரியாவில் நிறைவேறுவதை குறிப்பிட்டுச் சொல்கிறார். "இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவீர்''. என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன''. (மத். 1 : 22 - 23) இவ்வாறு முன்னுரைக்கப்பட்ட இறைவாக்கின் நிறைவாக மரியா விளங்குகிறாள்.

## தனயன் இயேசுவுக்கு தாய் மரியா

மரியா பற்றி நாம் அறிகின்ற வரலாற்று உண்மைகள் மிகச் சிலவே. அவற்றுள் மிக உறுதியானதும் முக்கியமானதும் எதுவெனில் அவள் இயேசுவின் தாய் என்பதே. இந்த உண்மைக்கு புதிய ஏற்பாடும் கிறிஸ்தவ மரபும் தெளிவான திடமான சான்றுகளைத் தருகின்றன.

மரியா இயேசுவின் தாய் என்பதை மறுத்துக் கூறுபவார்கள் இன்று இல்லை எனலாம். ஆனால் கிறிஸ்தவத்தின் முதல் இரண்டு நூற்றாண்டுகளிலும் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளச் சிலர் மறுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர். அவர்கள் தோற்றக் கொள்கையினர் என அழைக்கப்பட்டனர். ஊனுடல் கொண்ட உடல் இழிவானது, தீயது. புனிதரான இறைவனுடன் இணைய இயலாதது என அவர்கள் கருதினர். இக் கண்ணோட்டத்தின் காரணமாக "இறைவன் உண்மையில் மனிதன் ஆனார், இயேசு ஊனியல்பு கொண்டிருந்தார்'' என்பதை ஏற்க மறுத்தனர். இயேசு இறைவன், அவர் மனிதன் அன்று. அவரது மனிதத் தன்மை அவர் ஏற்ற வெறும் மாயை அல்லது வெளித் தோற்றம் என்பதுவே அவர்களது கொள்கைகோட்பாடு. இதனால் ஊனுடல் சார்ந்த முறையில் உண்மையாகவே இயேசுவின் தாய் என அவர்கள் மரியாவைக் கருதவில்லை. மாறாக அவர்களது பார்வையில் இயேசுவின் உண்மையான தாய் தூய ஆவியே. இத்தகைய கருத்துக்களை பிலிப்பு எழுதிய நற்செய்தி என்னும் திருமுறைப் புற நூலில் நாம் தெளிவாகக் காணலாம்.

இந்தத் தோற்றக் கொள்கையினரின் கருத்துக்களுக்கு ஆணித்தரமான மறுப்புக்கள் புதிய ஏற்பாட்டு நூல்களிலேயே காணக்கிடக்கின்றன. "கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராக ............... அனுப்பினார் (கலா. 4 : 5) என இயேசுவின் உண்மையான மனிதப் பிறப்பை தூய பவுல் வலியுறுத்துகின்றார். 'மரியாவின் மகன்' என (மாற். 6 : 3) மாற்கு நற்செய்தி வர்ணிக்கிறது. நான்கு நற்செய்திகளுமே மரியாளை "அவருடைய தாய்'' எனக் குறிப்பிடுகின்றன. (மத். 2 : 18; 2 : 11; 12 : 46; 3 : 15; மாற். 3 : 3; லூக். 2 : 34; 48 : 5; 8 : 19; அரு. 2 : 5; 19 ; 15 ) அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை "கன்னிமரியாளிடம் பரிசுத்த ஆவியினால் மனு உடல் எடுத்து மனிதரானார்''. என இயேசுவின் பிறப்பை அறிக்கையிடுகிறது. இவ்வாறு தனயன் இயேசுவின் தாய் மரியாதான் என்னும் உண்மை கிறிஸ்தவத்தின் தொடக்கத்தில் இருந்து இன்றுவரை பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டு வந்துள்ளது.

## தாய்மையின் தனித்துவத்தை தாங்கி நிற்கும் மரியா

மரியா தாய்மையின் நிறைவாக - இலக்கணமாக திகழ்கின்றாள். தாய்மை என்பது பிள்ளைகளைப் பெற்றெடுப்பது மட்டுமன்று. ஈன்று புறம் தருவதுடன் தாய்மையின் பணிகள் முற்றுப் பெற்று விடுவதில்லை. பெற்ற பிள்ளைக்கு அன்பு காட்டி, அமுதூட்டி அதனை வளர்த்து ஆளாக்கி விடவேண்டும். இதில்த்தான் தாய்மை முழுமை அடைகிறது. மரியாவின் தாய்மை இத்தகைய நிறைவைப்



— 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதே. ஏனெனில் மரியா இயேசுவைப் பெற்றாள், பேணிவளர்த்தாள், அன்புடன் அறிவும் ஊட்டினாள், பாலுடன் பண்பும் ஊட்டினாள். உண்ணக்கொடுத்த உணவுடன் உயர்ந்த எண்ணங்களையும் இலட்சியங்களையும் அவருக்குக் கொடுத்தாள்.

இயேசு உண்மையான மனிதன். அப்படியெனில் பிறப்பில் மட்டுமல்ல, வயதிலும் வளர்ச்சியிலும் கூட அவர் ஏனைய மனிதக் குழந்தைகள் போலவே மலர்ந்திருக்க வேண்டும். மற்ற மனிதக் குழந்தைகளைப் போலவே அவரும் வாழ்வின் ஆரம்பமும் அடிப்படையுமான, முதலும் முக்கியமுமான காரியங்களைத் தம் தாயிடமிருந்தே கற்றிருக்கவேண்டும். குறிப்பாக அவரிடம் விளங்கிய அன்புணர்வு, அறநோக்கு, எல்லார் பாலும் அன்பு, ஏழைகள் பால் தனிப்பட்ட பரிவு, விடுதலைத்துடிப்பு, அதற்குரிய துணிவு, தியாகம் எனும் பண்புகளை அவரிடத்தில் வளர்த்து விட்டதில் அவரின் தாய் மரியாவுக்கு தனியொரு பங்கு நிட்சயம் இருந்திருக்க வேண்டும்.

## கன்னியாகவே தாய்மை எய்திய மரியா

கன்னிப்பெண் கர்ப்பவதியா? இது மனித ஆராட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு விடயம். ஆனால் "கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்பது மரியாவின் வாழ்வில் தெளிவாகிறது. அன்னை மரியா கன்னியாகவே இருந்து கொண்டு அற்புதமான முறையில் இயேசுக் கிறிஸ்துவைப் பெற்றெடுத்தாள் என்பது புதிய ஏற்பாட்டில் தெளிவாக உள்ளது.

"அவருடைய தாய் மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. அவர்கள் கூடி வாழும் முன் மரியா கருவுற்றிருந்தது தெரிய வந்தது. அவர் தூய ஆவியால் கருவுற்றிருந்தார். ( மத். 1:8 ) என்று கூறுவதன் மூலம் மரியா கன்னியாகவே தாய்மை எய்தினார் என்பதை மத்தேயு சுட்டிக்காட்டுகிறார். "தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும் ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்." ( லூக். 1:35 ) என்ற வானதூதரின் வார்த்தைகளில் லூக்காஸ் மரியாவின் கன்னித்தன்மையை எடுத்துக் காட்டுகின்றார்.

மரியா வயிற்றில் இயேசு பிறப்பார் என்று வானதூதரால் கூறப்படுகின்ற பொழுது மரியா கூறிய பதில் "இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே" ( லூக். 1;34 ) என்பதாகும். அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே யோசேப்புக்கும் மரியாவுக்கும் மண ஒப்பந்தம் ஆகியிருந் தாலும் அவர்கள் இன்னும் திருமணம் செய்யவில்லை. கணவன் — மனைவி என்ற உறவில் வாழவில்லை. ''நான் கன்னி ஆயிற்றே அதாவது ''நான் கணவனை அறியேனே'' (பழைய மொழி பெயர்ப் பின் படி) என்று குறிப்பிடுவது தான் சூசையை இன்னும் கணவராக அனுபவிக்கவில்லை என்று தான் பொருள். மேற்கண்ட விவிலிய ஆதாரங்களின் அடிப்படையில்தான் கத்தோலிக்க திருச்சபை மரியா இயேசுவைப் பெற்றெடுக்க முன்பும், பெற்றெடுக்கும் போதும், பெற் றெடுத்த பின்பும் கன்னியாகவே இருந்தாள் என்று அறிக்கையிடுன்றது, படிப்பிக்கின்றது.

## 'புதிய' சகாப்தத்தின் அடையாளமான கன்னிமை

அன்னை மரியாவின் கன்னிமை என்பது இன்னும் ஓர் ஆழ்ந்த இறையியல் அர்த்தத்தையும் கொண்டுள்ளது. அதாவது இயேசுக் கிறிஸ்து ஒரு புதிய சகாப்தத்தை, இறையாட்சியை உலகில் தோற்று விக்க வந்தார். என்பது நற்செய்தி நூல்களில் தெளிவாகவே உள்ளது. கடவுளின் மகன் இவ்வுலகில் பிறந்த விதம், அவரது பணி வாழ்வு, புதிய போதனை, அவரது தியாக மரணம், அனைத்திலும் ஒரு மேலோட்டமான புதுத்தன்மையைக் காண்கிறோம். உலகில் இறை வனுக்கே உரிய புதிய மதிப்பீடுகள் வந்துவிட்டதையும் உணர முடி கின்றது. அன்னை மரியாவின் கன்னிமை இயேசு உருவாக்கிய 'புதிய' உலகின் அடையாளமாகவும் இருக்கிறது. ஆகவே மரியாள் தன் உடல் சம்மந்தப்பட்ட வாழ்க்கையிலும் கன்னிகை. இயேசு நிறுவ வந்த புதிய பாணி சமூகத்தை பிரதிபலித்து புதுமை படைப்பதிலும் கன்னிகை.

## கிறிஸ்து பிறப்பின்போது ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட மரியா

புனித பவுல், நாம் அனைவரும் பரிசுத்த ஆவியின் ஆலயங்கள் (1 கொரி 6:19) என்று பொதுவாகக் குறிப்பிட்டாலும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் 'திருச்சபை' என்னும் கொள்கைத் திரட்டு எண் 53 ''மரியா தூய ஆவியின் ஆலயம்'' என்பதைத் தெளி வாக எடுத்துக் கூறுகிறது ''அன்னைக்கு ஒரு புகழ் மாலை'' என்ற நூலில் அதன் ஆசிரியர் இப்படி எழுதுகிறார். ''ஆன்ம சரீர பரிசுத்தம் தூய்மையுடைய கன்னி மரியாவின் உள்ளத்தில் மூவொரு கடவுளின் ஆவியே குடிகொண்டிருந்தார். எனவேதான் திருச்சபை கன்னி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாவைத் தூய ஆவியின் ஆலயம் என பெருமிதத்தோடு அழைக்கிறது'' கிறிஸ்து பிறப்பின் முன்னறிவிப்பின் போது மரியாவுக்கு ஆவியானவர் வாக்களிக்கப்படுகிறார். கபிரியேல் வானதூதர்'' "அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் (லூக். 1:28) என்று வாழ்த்துவது மூவொரு கடவுளின் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியானவரும் மரியாளோடு இருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக அமைகிறது. மேலும் " தூய ஆவி உம்மீது வரும், உன்னத கடவுளின். வல்லமை உம்மேல் நிழலிடும் ஆதலால் உம்மிடம் பிறக்கப்போகும். குழந்தை தூயது '' (லூக் 1:35) என்ற வார்த்தைகள் ஆவியானவர் அவரை ஆட்கொண்டார் என்பதற்கான சிறந்த விவிலிய ஆதாரமாகும்'

"மரியா வாழ்த்தை எலிசபெத்து கேட்டவுடனே தூய ஆவியினால் எலிசபெத்து முற்றிலும் நிரப்பப்பட்டார். ( லூக். 1:41 ) என்று வாசிக்கின்றோம். அன்னை மரியா முழுவதும் ஆவியினாலே ஆட்கொள்ளப்பட்டதால் தான் அவரிடமிருந்து புறப்பட்ட வாழ்த்தும் அதனைப் பெறுவோரை, ஆவியால் நிரப்பியது. மரியா ஆவியானவராலே நிரப்பப்பட்டிருந்ததால் தான் பொருள் பொதிந்த விடுதலைக் கீதத்தை தன தாக்கிப் பாட முடிந்தது ( லூக். 1;46–55 ). எனவேதான் மாட்டின் லூதர் " மரியா தன்னை தூண்டி வழிநடத்தும் ஆவியானவரோடு தனிப்பட்ட தன்னிலை அனுபவம் கொண்டிருந்தார்... கடவுள் தாழ்ந்தோரை மேன்மையாக உயர்த்தி உயர்ந்தோரைத் தாழ்த்தி தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார் என்ற உண்மையைத் தூய ஆவியானவரிடமிருந்தே கற்றுக்கொண்டார் '' என்கிறார்.

1905 இல் ரெண்டல் ஹரிஸ் என்பவர் மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த ஓலைச் சுவடி ஒன்றில் கீழ்க்கண்டபாடலைக் கண்டார்.

" ஆவியானவர் தமது சிறகுகளை
கன்னியின் கருப்பை மீது விரித்தார்
அவர் கருவுற்றுக் குழந்தையைப்

பெற்றெடுத்து கன்னித் தாயாக மாறினார்.'' என்று அப்பாடல் தொடர்கிறது. தெய்வம் மட்டுமே தெய்வத்தைப் பிறப்பிக்கமுடியும் என்பதால் தூய ஆவியின் வல்லமை கிறிஸ்துவின் பிறப்பின் போது அன்னையோடு அதி உன்னத நிலையில் இருந்தது. ஹென்றி காசெல்லஸ் என்பவர் ''தூய ஆவியின் வருகை மரியாவை மனிதத் தாய் மட்டுமன்றி தெய்வத் தாய்மையையும் அடையச் செய்கிறது. எனவே மரியா இயேசுவின் தாயாக மட்டுமன்றி கடவுளின் தாயாகவும் இருக்கிறாள்'' என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

இயேசுவின் பிறப்பு மனித வரலாற்றில் முக்கியமான ஒரு நிகழ்வு. அந்தப் பிறப்பு நிகழ்விலே மரியாவின் பங்களிப்பு முதன்மை யானது முக்கியமானது. இறைமகனை ஈன்றெடுத்த அந்த மறை பொருளில் மரியாவின் பங்களிப்பைப் படம் பிடித்துக் காட்டவே இக்கட்டுரை முயன்றுள்ளது. முன்னுரைக்கப்பட்ட இறைவாக்கு எவ்வாறு மரியாவில் நிறைவேறுகிறது என்பது இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. தனயன் இயேசுவின் தாய் மரியா அவள் எப்படி தாய்மையின் தனித்து வத்தைத் தாங்கி நின்றாள் என்பது பற்றி இங்கு பேசப்படுகிறது. கன்னி யாகவே தாய்மை எய்திய அந்த அதிசயம் இங்கே ஆராயப்படுறது. இயேசு ஆரம்பித்த 'புதிய' சகாப்தத்தின் அடையாளமாக மரியாவின் கன்னிமை இனங்காணப்படுகிறது. ஈற்றில் இயேசுவின் பிறப்பின்போது அந்த அன்னையோடு ஆவியானவர் எப்படி செயலாற்றினார் என்பது இங்கு நோக்கப்படுகிறது.

## உசாத்துணை நூல்கள்


— தியாகு "விவிலியக் களஞ்சியம்," விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை–28, 1992.

— பால் லியோன் – வ; ஏரோணிமுசு – து, "இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்," தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப் பள்ளி 1987.

— Raymond E. Brown, "Mary in the New Testament Claretian Publications, Philippines, 1935.




கிறிஸ்மஸ் காலம் அண்மித்ததும் எமக்கு முன் மகிழ்ச்சியூட்டும் உருவ மாக இருப்பவர்தான் இந்த "பப்பா" பல பரிசு பொருட்களுடன் குழந்தை களை மகிழ்விக்கும் புனித நிக்கொலஸ் குழந்தை இயேசு அளிக்கும் அளவற்ற அன்புப் பரிசின் அடையாளமாகவே திகழ்கின்றார். மத்திய ஆசியாவில் உள்ள மீரா என்னும் நகருக்கு ஆயராக இந்த நிக்கொலஸ் ஏழை எளியவரிடமும் குழந்தைகள் இளைஞரிடமும் அன்பும் இரக்கமும் கொண்டு அவர் களுக்கு உதவினார். டச்சு மாலுமிகள் ஆயரின் பரிவிரக்கம் மக்க ளுக்கு அறிவிக்கப்பட்டு டிசம்பர் 6 ஆம் நாளில் அவரின் திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. வியாபாரங்களுக்கு விளம்பரமாக அல்ல, மாறாா ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தலின் விளம்பர மாகவே கிறிஸ்மஸ் தாத்தா எமக்கு தரப்படுகின்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்து பிறப்பும் நற்செய்தி அறிவிப்பும்

**அருட்திரு ம. வி. இ. இரவிச்சந்திரன்**
பங்குத்தந்தை
புனித அன்னாள் ஆலயம்,
பண்டியன்தாழ்வு.

புதிய மிலேனியத்தின் நுழைவாயிலிலே இருக்கும் இன்றைய திருச்சபையில் நற்செய்தியறிவிப்புப் பற்றி மீளவும் முனைப்புடன் பேசப்பட்டு வருகிறது. மீள் நற்செய்தியறிவிப்பு, நவநற்செய்தியறிவிப்பு போன்ற எண்ணக்கருக்கள் இறையியலாக்க வட்டங்களில் தீவிர விசாரணைக்குள்ளாக்கப்பட்டு வரும் அதேவேளை எமது யாழ் தலத் திருச்சபையும் நற்செய்தியறிவிப்பு ஆணைக்குழுவிற்கு புத்துயிர் அளித்து புதிய மிலேனியத்திலே புது வேகத்துடன் செயற்பட எத்தனிப்புகளை மேற்கொண்டு வருகிறது. சர்வதேசிய, தேசிய மறைமாவட்ட மட்டங்களிலே நற்செய்தியறிவிப்பின் பால் ஏற்பட்டுள்ள இந்தப் புதிய புத்தூக்க சூழ்நிலையிலே எமது மண்ணுக்குரிய நற்செய்தியறிவிப்பின் உள்ளடக்கத்தையும் வடிவத்தையும் வரையறுத்துக்கொள்ளும் ஒரு நெடிய கடின பயணத்திற்கான சில முன்னேற்பாடுகளை தேடுவதை நோக்காகக் கொண்டே இக்கட்டுரை வடிக்கப்படுகிறது.

## எது நற்செய்தி?

இது நற்செய்தியறிவிப்பில் ஈடுபடும் ஒவ்வொருவரும் கேட்டு தெளிவு தேடிக்கொள்ளவேண்டிய ஒரு முக்கியமான வினாவாகும். ஏனெனில் நற்செய்தியறிவிப்பு என்ற எண்ணக்கரு வரலாற்றில் மிகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட சமய எண்ணக்கருக்களுள் ஒன்றாகக் காணப்படுகிறது. திருமுழுக்குப் பதிவேடுகளைப் பெருக்கிக்கொள்வது தான் நற்செய்தி அறிவிப்பென்றோ, அல்லது அதிக எண்ணிக்கையில் வேதாகமப் பிரதிகளை புழக்கத்தில் விடுவதுதான் நற்செய்தியறிவிப்பு என்றோ, அல்லது தொடர்பூடகங்களைப் பயன்படுத்தி கிறிஸ்துவைப் பற்றிய தகவல்களை பரப்புவதுதான் நற்செய்தியறிவிப்பு என்றோ கருதுவோமானால் அது நுனிப்புல் மேய்ந்த கதையாகவே முடியும். ஆகவேதான் வேதாகமப் பின்னணியில் நற்செய்தி என்றால் என்ன என்பதை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதோ எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார் ''.

லூக். 2 : 10.

யேசுக்கிறிஸ்து பிறந்தபோது வானதூதர்கள் இடையர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான நற்செய்தியை அறிவித்தனர். அவர்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்பதே அந்நற்செய்தியாகும் ஆக ஒருவருடைய தளைகளிலிருந்து மீட்பு வருகிறது. அவரை தளைகளிலிருந்து மீட்பர் வருகிறார் என்பதே அந்நற்செய்தியாகும். மீட்பு வருகிறது என்ற செய்திதான் நற்செய்தி ஆயின் வேதாகமப்பின்னணியிலே மீட்பு மற்றும் மீட்பர் என்பதன் பொருள் புரிந்துகொள்ளப்படுவதும் நற்செய்தியறிவிப்பிற்கு அவசியமாகிறது.

## இறைவன் மீட்கிறார்

இறைவன் மீட்கிறார் என்பது நாம் மிகச் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு கருத்து. ஆயினும் பாரம்பரியமாக அதனை நாங்கள் இறைவன் பாவத்திலிருந்து மீட்கிறார் என்ற வாறாகவே பொருள் கொள்கிறோம். இறைவன் தரும் மீட்பை மனுக்குலம் முழுமையையும் பீடித்திருக்கும் தீமையின் அனைத்து வடிவங்களிலிருந்தும் விடுவிக்கும் ஒரு இறை அருள் செயல்முறையாகக் காண நாங்கள் தவறிவிடுகிறோம். இதனால் முழு மனுக்குலத்திற்கும் விடுதலையை முன்மொழிய வேண்டிய — முன்னெடுக்க வேண்டிய கிறிஸ்தவம் சடங்காசாரங்கள் நிறைந்த ஒரு வைதீக மதமாக சுருங்கிப் போய்விடும் ஆபத்து ஏற்பட்டது.

ஆனால் வேதாகமம் காட்டும் மீட்போ வேறு விதமானதாக இருக்கிறது. அதன்படி மீட்பு என்பது இறைவன் வரலாற்றில் துன்புறும் தன் மக்களுக்காகப் புரியும் ஒரு பேரருள் செயலாகவே காட்டப்படுகிறது.

## பழைய ஏற்பாட்டில்

யூத சமயத்தின் அடிநாதமாக திகழ்வது இஸ்ராயேல் மக்கள் எகிப்தியரிடமிருந்து பெற்ற விடுதலை அநுபவமே என்பது மறக்கப்பட முடியாத உண்மை. இது இறைவன் மனிதனுக்கு ஏற்பாடு செய்துள்ள மீட்பின் வரலாற்றுத் தன்மைக்கு ஒரு சிறந்த முன்னடையாளம். இறைவன் கற்பனையிலல்ல அல்லது ஆன்மாவிலோ உள்ளத்திலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டு மல்ல மாறாக உலகிலே அன்றாட வாழ்விலே வரலாற்றிலே விடுதலையை அருளும் மீட்பராக திகழ்கிறார். துன்புறும் மக்களிற்கு பக்கமாக அவர்களது கூக்குரலை கேட்பவராக நின்று அவர்களுக்கு விடுதலை அளிக்கிறார். விடுவிக்கப்பட்ட ஒரு வாழ்க்கைக்கு வழிநடத்திச் செல்கிறார்.

எகிப்திய அடிமைத் தளையறுப்பிலிருந்து இஸ்ராயேல் மக்களுக்கு ஆரம்பிக்கும் இந்த விடுதலை அனுபவமானது பல்வேறு புற இன ஆளுகை முயற்சிகளுக்கு எதிராக நிலை நிறுத்தப்படும் சுதந்திர வாழ்வாகவும் பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து மீளவும் அழைத்து வரப்படும் மற்றுமொரு புதுவாழ்வு அனுபவமாகவும் வரலாற்றில் பதியப்படுகிறது.

மொத்தத்தில் இஸ்ராயேல் மக்களை இறைவன் மீட்கிறார் என்று கூறுகிறபோதோ அல்லது இறைவனை மீட்பர் என்று அழைக்கிற போதோ பாவத்திலிருந்து கிடைக்கும் ஒரு ஆன்மீக மீட்பை மட்டு மல்லாமல் துன்பம், அடக்குமுறை, அடிமைத்தனம் போன்ற தீமையின் பல வடிவங்களிலிருந்து வரலாற்றில் கிடைக்கும் உண்மை மீட்பை விடுதலையையே குறிக்கின்றனர் எபன்தே உண்மை.

## யேசு மீட்கிறார்

பழைய ஏற்பாட்டில் இறைவன் ஆற்றிய மீட்புச் செயலை வரலாற்று நிகழ்வாக ஏற்றுக் கொள்ளும் சிலர் புதிய ஏற்பாட்டில் இயேசு ஆற்றும் மீட்புச்செயலை ஒரு ஆன்மீகச் செயலாக மட்டும் பொருள் கொள்ள முயல்கின்றனர். இயேசுவின் சிலுவைப் பலியை மனுக்குலத்தின் பாவத்திற்கான பரிகாரப் பலியாக மட்டும் கருதி அவர் தமது வாழ்வு, பாடுகள், மரணம் என்பவற்றின் மூலம் முன்வைக்கும் வரலாற்றில் நிகழும் விடுதலைச் செயற்பாட்டின் வரலாற்று வேர்களை அகற்றி விடுகின்றனர். அதனால் கிறிஸ்தவம் தருகின்ற மீட்பு அல்லது விடுதலை இவ்வுலகிற்கு அடுத்த ஒரு மெய்ப்பொருள் என்ற விதமான ஒரு இறையியல் மாயை உருவாகுகின்றது.

ஆனால் யேசு உண்மையில் ஒரு வரலாற்று நாயகனே, அவர் வரலாற்றிலே இரத்தமும் சதையுமாக வாழ்ந்து, அவ்வாறு இரத்தமும் சதையுமாக வாழ்ந்த மனிதர்கள் மத்தியிலேயே அவர்களது விடுதலைக் காக தனது சிந்தனையையும் செயற்பாட்டையும் முன் வைத்தார். ஏழைகளை அன்பு செய்தார். பாவிகளை அரவணைத்தார். இறையரசு அத்தகையோரதே என்று எடுத்துரைத்து அவர்களுக்கு மீட்பின் செய்தியை முன் வைத்தார். ஏழைகளை ஒதுக்கப்பட்டோரை அத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலேயே வைத்திருந்த சமுதாயத்தின் பெரிய மனிதர்களோடு முரண்பட்டார். அவர்கள் சமய, சமூக, அரசியல் ரீதியாக எந்த முகாமைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களது தவறுகளைச் சுட்டிக்காட்டி மனமாற்றத்துக்கு அழைத்தார்.

இவ்வாறு யேசு தம்மை ஒடுக்கப்பட்டவரோடு அடையாளப் படுத்திக்கொண்டு அவர்களை மீட்புக்கான சிந்தனைச் செயற்பாட்டில் இறங்கியதன் விளைவே அவரது சிலுவை மரணம். ஒடுக்கப்படும் மக்களின் துன்பத்தின் இறுதிக்கணங்களையும் சிலுவையில் அனுபவித்து மரணித்ததின் மூலமே அவர் புதியதொரு ஆட்சியைத் தொடக்கி வைக்கிறார்.

ஆகவே அவரது பிறப்பில் அறிவிக்கப்பட்டது போல இயேசு உண்மையாகவே ஒரு மீட்பர். ஆன்மீக மீட்பர் மட்டுமல்ல முழு மனுக்குல வரலாற்று மீட்பர். அவரது மீட்பு வரலாறு கடந்தது. ஆனால் வரலாற்றையும் உள்ளடக்கியது, ஏற்கனவே ஆரம்பித்துவிட்ட இறுதிக் காலம் தொடர்பானது.

லூக்காஸ் நற்செய்தியின்படி அவரது பிறப்பு ஒரு மீட்பின் நற்செய்தியாக இடையர்களுக்கு அறிவிக்கப்படுவதிலிருந்து இது துல்லியமாக விளங்குகின்றது. இயேசுவின் பிறப்பு வரலாற்றில் ஏழைகளின் ( ஒடுக்கப்படும் மக்களின் ) பிரதிநிதிகளாகவே இடையர்கள் காட்டப்படுகின்றனர். ஆனால் அதிகார வர்க்கத்தைச் சார்ந்த ஏரோது போன்றவர்களுக்கு அது ஒரு பயங்கரமான செய்தியே. அவர்கள் அன்றும், இன்றும், என்றும் அவரைக் கொல்லவே தேடுவர். ஆகவே வரலாற்றில் ஒடுக்கப்படும் – துன்புறும் மக்களுக்குத்தான் யேசு ஒரு நற்செய்தி. அது ஏன் நற்செய்தி என்று சொன்னால் அவர்களது கட்டுண்ட நிலைகளிலிருந்து அவர் விடுதலை அளிக்க வருகின்றார் என்பதனாலேயே.

ஆகவே நற்செய்தி அறிவிப்பு எத்தனிப்புக்கள் எவ்வெப்போதெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றதோ அவ்வப்போதெல்லாம் அம்மக்களுக்குரிய தளையுறு நிலைகள் கருத்தில் எடுக்கப்படவேண்டும்: அவற்றிலிருந்து விடுதலை பெற்றுத்தருவதாகவே நற்செய்தியறிவிப்பு அமையவேண்டும்.

## எம் மண்ணின் தளையுறு நிலைகள்

இன்று எமது மண்ணில் காணப்படும் தளைகள் போதியளவு ஆய்வுக்குட்படுத்தப்படாமல் கேள்வி கேட்கப்படாமல் அறியப்படாமலே கிடக்கின்றன. நாட்டின் வடகிழக்கில் நடக்கும் போரும் அதின் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக தொடரும் அவலங்களும் ஒரு புறமிருக்க எமது சமூகத்தின், சமயங்களின், பண்பாட்டம்சங்களின் பிற்போக்குத்தனமான சிந்தனைப் போக்கும் அமைப்பு முறைகளும் அதன் விளைவாக எழும் சமூக முரண்பாடுகளும் எதிர்க்கப்படாமலே போகின்றன. போரின் பக்க விளைவாக ஏற்படும் சமூக மாற்றத்திற்கான சீரிய சிந்தனைகள் முன்னெடுக்கப்படுவது அரிதாகவே காணப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் ஒடுக்கப்படும் மக்களின் சார்பாக அவர்களோடான வாழ்வனுபவப் பகிர்தலில் இருந்து பிறக்கும் சிந்தனைப் போக்குகளும் செயற்பாட்டு வடிவங்களும் அவசியமாக தேவைப்படுகின்றன. மக்களைப் பிணைத்து வைத்திருக்கும் உண்மையான தளைகளை அடையாளம் காணுவதும் அவற்றை வெளிப்படுத்துவதும், தாம் உட்பட்டிருக்கும் தளைநிலைகளை அவர்களுக்கு புரியவைப்பதும் அவற்றிலிருந்து வெளிவர அவர்களைத் தூண்டுவதுமான விடுதலைச் செயல்முறைகளே இன்று அவர்களுக்குத் தேவையாக இருக்கும் மீட்பாகும்.

## இன்று நற்செய்தியறிவிப்பு ...?

மேற் சொன்ன ஒரு தளையுறு நிலையில் அதை அறிவதற்கான ஆரம்ப முயற்சிகளே பெரிதும் மேற்கொள்ளப்படாத ஒரு சூழ்நிலையில் எத்தகையதொரு நற்செய்தி அறிவிப்பை இன்று திருச்சபையால் மேற்கொள்ள முடியும்? மக்களின் வாழ்வனுபவங்களுக்கு புறம்பே நின்று இயேசு பற்றிய வெற்றுக் கோஷங்களையும் பிரச்சாரத் தாரைகளையும் நாம் ஊதக்கூடும் ஆனால் அவை எவ்வளவு தூரம் மக்களுக்கு மீட்பின் நம்பிக்கையை ஊட்டுபவையாக இயேசுவை மீட்பராக உணரச் செய்பவையா இருக்கும்.

மாட்டுத் தொழுவத்தில் பிறக்கும் ஒருவரைத்தான் இடையர்கள் மீட்பராக அடையாளங் காணக்கூடும். ஏரோதின் மாளிகைகளுக்குள்ளும், தலமைக் குருவின் வாசஸ்தலங்களுக்குள்ளும் தேவாலயங்களின் தூயகங்களுக்குள்ளும் பிறக்கும் இயேசுவை......? இவர்களின் வாயிற்படிகளைக் கூட மிதிக்க வக்கற்றவர்களல்லவோ நமது ஏழை இடையர்கள்?

துன்புறும் மக்களின் ஒடுக்குமுறை வாழ்வனுபவங்களுக்குள் நம்பிக்கை தரும் பிரசன்னமாகப் பிறப்போம் இது. தான் உண்மை நற்செய்தியறிவிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கால சூழ்நிலையில் கிறிஸ்மஸ்

அருட்சகோ. ம. அன்ரன் அமலதாஸ்
4 ஆம் வருட இறையியல்.
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி.

அன்று இருளில் தவழ்ந்து கிடந்த மக்கள் இயேசுவின் ஒளியைக் கண்டு அதிசயித்தனர், உள்ளம் பூரிப்படைந்தனர், புதிய வாழ்வை அனுபவித்தனர். இதை எண்பிக்கவே சிமியோன் குழந்தை இயேசுவைத் தம் கரங்களில் ஏந்தி "இதுவே புறவினத்தாருக்கு இருள் அகற்றும் ஒளி, இதுவே உம் மக்கள் இஸ்ராயேலை ஒளிர்விக்கும் மாட்சிமை" ( லூக். 2 : 31—32 ) என புகழ்ந்து பாடினார். இருளிலும் இறப்பின் நிழலிலும் இருப்போர்க்கு ஒளியின் வழியைக் காட்ட உதித்த ஒளியே இயேசுவின் அதி உன்னத ஒளி. இன்று போரின் கொடூரத்தினால் மனித மனங்களில் ஓலமிடும் அழுகுரல்கள் ஓயாமல் எந்நாளும் பெருகி வருகின்றன. வன்முறைகளும் அதிகாரப் போக்கும் மக்களைப் படுகுழியில் வீழ்த்துகின்றன. வீழ்ந்த மக்கள் எழுந்து நடக்கத் தள்ளாடுகின்றனர். காரிருள் படிந்த எம்மண்ணில் கலங்கரை ஒளியைக் காணப் பரிதவிக்கும் உள்ளங்கள் ஆயிரமாயிரம். இருளின் பாதையில் எம்மின மக்களும் நடைபிணங்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அன்று இருளை வென்ற அந்த உன்னத ஒளி இன்றும் எம்மின மக்களுக்கும் ஓர் புதிய எழுச்சியை, புதியதோர் விடிவை உண்டு பண்ணும் எனும் சிந்தனையை இந்த ஆக்கத்தினூடே கொடுக்க விழைகின்றேன். எதிர்க்கும் சக்திகள் மலைபோல் எழுந்தாலும், இருளின் ஆட்சி எம்மண்ணில் இழையோடினாலும் ஆண்டவன் ஒளியில் நாம் அடைக்கலம் புகுவோமெனில் அவரின் மகிமை நிறைந்த ஒளியில் நிறைவாழ்வைக் கண்டடைவோம்.

## இன்றைய மனித தேடல்

இன்றைய யதார்த்த சூழ்நிலையில் ஒவ்வொரு மனிதனும் தன்னை உடல், உள ரீதியில் நிறைவு படுத்த விரும்புகின்றான். இதன்நிமித்தம் அவன் பல்வேறு குறுக்கு வழிகளை நாடி, தேடி தன்னை அனைத்திலும் திருப்திப்படுத்த முனைகின்றான். மற்றவர்கள் மத்தியிலே தானும் சமம் என்பதை நிரூபிக்க பல்வேறு சவால்கள் மத்தியிலும் உள வளர்ச்சியில் தன்னிறைவு காணவிரும்புகின்றான். மேலாக ஒரு சமூகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் வாழுகின்ற ஒவ்வொருவரும் அந்த சமூகத்தில் உயர்ந்த இருப்பிடத்தை வகிக்க வேண்டும் என ஆசிக்கின்றனர். இது சாதாரணமாக இப்போது ஒவ்வொரு மனிதரும் தேட விழையும் ஒரு மனித நாட்டமாக அவனது சுபாவத்தோடு புரண்டோடுகின்ற ஒரு தேடலாக மாறிவிட்டது.

இதன் வளர்ச்சிப் படியில் ஒருவர் மற்றவர் நலனில் அல்லது அவரின் மேம்பட்ட வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்து ஒளியூட்டி வழியைக் காட்டுகின்ற தன்மை அருகிக்கொண்டு செல்கின்றது. ஒருவரையொருவர் உளமார நேசிக்கின்ற மனித நேயமும், ஆறுதல் கொடுக்கின்றன. கனிந்த நெஞ்சங்களின் அன்புப் பார்வையும் மறைந்து செல்கின்றன. தங்களின் உறவு, தங்களின் குடும்பம் ஓர் வளர்ச்சிப் பாதையில் சென்றால் அதுவே மகிழ்ச்சிகரமானது என்ற வாஞ்சையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தப் பின்னணிகள் காலம் வகுத்த திட்டமோ அல்லது மனிதன் காலத்தினூடாக தன்னை உருமாற்றிக்கொண்ட செயல்ப்பாடுகளோ என யாம் அறியாத இருளின் வளர்ச்சிப்படியாக முனைவிட ஆரம்பித்துள்ளது.

## மனித தேடலில் இருளின் படிகள்

நாம் முழுமை நிலை பெற உடல், உள, ஆன்மீகம் இவை மூன்றிலும் பன்முகப்படுத்தப்பட்ட வளர்ச்சி இன்றியமையாதது. ஆனால் இன்று எங்கள் மத்தியில் ஆன்மீகம் பற்றிய பார்வை மயக்க நிலையில் உள்ளது, விசுவாசத்தின் ஒளியில் கடவுளைத் தேடி அவருடைய வழியில் ஞான வழியைப் பின்பற்றுகின்ற உள்ளங்கள் படிப்படியாக மறைந்து செல்வதைக் காணமுடிகின்றது. தம்முடைய பரந்த ஒளியினால் இறைபராமரிப்பை நல்கும் ஒளியாகிய இறைவனில் அவநம்பிக்கையின் பரிமாணங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன, இதனால் உடல், உள நிலைகளைப் பலப்படுத்தி உறுதிப்படுத்துகின்ற ஆன்மீக தேடல், அதனது மறுமலர்ச்சி பின்னோக்கிய பாதையில் நடைபயில்கின்றது. மக்கள் ஒளியிழந்து, இருளின் பாதையில் பயணம் போகுதே மனித வாழ்வு இங்கே ஒளியைக் காண்போம் எப்போது என்ற ஏக்கத்தோடு பரிதவித்து வாழ்கின்றனர். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் நாங்கள் பார்க்கின்றோம், எப்படியெனில் "மனிதனுடைய வாழ்வு முழுவதும் தனிவாழ்வானாலும் சரி, குழுவாழ்வானாலும் சரி, தீமைக்கும் நன்மைக்கும் இடையே, இருளுக்கும் ஒளிக்கும் இடையே நிகழும் ஒரு பரபரப்பான போராட்டமாகத் தோன்றுகின்றது"[1].



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மாயைகளில் அதனது கவர்ச்சிப் போக்கில் எம்முள் பலர் மூழ்கி ஆன்மீகமே இல்லை என்ற தத்துவத்தோடு வாழுகின்ற உள்ளங் களும் இல்லாமல் இல்லை.

எம்மண்ணில் உடல், உள வளர்ச்சிப்படியில் இருளின் ஆட்சியே மேலோங்கி வருகின்றது. எவை, எவை உடலிற்கும், உள்ளத்திற்கும் இன்பம் தருமோ அவற்றின் பின்னாலே அலைமோதி, உல்லாசங் களிலும், களியாட்டங்களிலும் எம்மினம் சிக்கித் தவிக்கின்றது, இதை உணர்த்த இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் "இருளின் வல்ல மைக்கு எதிராக நிகழ்கின்ற கடினமான போராட்டம் மனிதனது வரலாறு முழுவதையுமே ஊடுருவியுள்ளது" [2] என குறிப்பிடப்படுகின்றது.

இந்நிலையில் சமகால மக்கள் தங்கள் வாழ்வில் ஆன்மீகவியல் துறையில் ஓர் வெறுமையையும், ஏன் ஏனைய துறைகளில் வறுமையை யும் எதிர்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் எம்மினம் சென்று கொண்டிருக்கின்றது.

அத்துடன் எங்கள் யுத்த மண்ணில் வாழுகிற ஒவ்வொரு உள்ளமும் பலதரப்பட்ட அச்சத்துடனும், அங்கலாய்ப்புடனும், நாளை என்ன நடக்குமோ என்ற ஏக்கத்துடனும், இரவின் பயங்கரங்கள் மத்தி யிலும் தங்கள் வாழ்வுப் பயணத்தை செலுத்தி வருகின்றனர். இருள் சூழ்ந்த, அபயக்குரல் நிறைந்த, மனித உயிரின் மாண்பு சிதைந்து போன, ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்தப் பின்னணிகள் எமக்கு உணர்த்துவது யாதெனில் இருளின் ஆட்சி எம் மண்ணில் மேலோங்கி இருக்கின்றமையே ஆகும்.

## இருளை வென்ற ஒளி

எம் மண்ணில் இழையோடுகின்ற இந்த இருளின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடியது இறைமகன் இயேசுவின் பிறப்பினூடாக உதயமாகின்ற ஒளியின் ஆட்சியே என்று சொன்னால் அது மிகையா காது. அவருடைய பிறப்பினூடு மெய்யாகவே மண்ணில் உள்ள மாந்தர்க்கு பேரொளி சுடர்விட ஆரம்பித்தது. ஆனால் இருளின் வழியில், பாவத்தின் மாயையில் வாழ்ந்து கொண்டிருந்த ஏரோதிற்கு ஒளியாகிய கிறிஸ்துவின் வருகை அச்சத்தை உண்டு பண்ணியது. ஏரோது மட்டுமல்ல ஜெருசலேம் முழுவதும் கிறிஸ்துவின் மாட்சிமை நிறைந்த, பேரொளியினூடு கலக்கம் அடைந்தது ( மத். 2 : 3 ).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கத்தில் மகிமையின் பேரரசாம் இயேசுவின் பிறப்பின் எதிரொலியைக் கேள்விப்பட்டு விண்மீனின் தோற்றத்தினூடு கீழ்த் திசையிலிருந்து ஞானிகள் ஜெருசலேமிற்கு விரைந்து அவரை வணங்க வந்தார்கள் ( மத். 2 : 2 ).

விண்மீனின் வழிகாட்டலில் மூன்று ஞானிகளும் ஒளியின் இருப்பிடமாகிய கிறிஸ்துவைக் கண்டு தெண்டனிட்டு வணங்கி தம் பேழைகளைத் திறந்து பொன்னும், தூபமும், வெள்ளைப் போளமும் அவருக்குக் காணிக்கையாகச் செலுத்தினர் ( மத். 2 : 11 ). அவருடைய மாட்சியும், மகிமையும் நிறைந்த சுடரொளி அவர்களுக்கு கலங்கரைத் தீபமாய் மலர்ந்தது.

இயேசுவின் பிறப்பின் ஒளி பல உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஒரு புதிய வெளிச்சத்தை உண்டு பண்ணியது. அவருடைய பிறப்பின் மலர்வு ஓர் புரட்சியை ஏற்படுத்தியது. கிறிஸ்துவின் பிறப்பு ஓர் ஒளிவிழா இருளில் தவழ்ந்து கிடந்த மக்களுக்கு ஒளி கொடுத்து, நம்பிக்கை ஊட்டி, வழிகாட்டி, உண்மை விளக்கி, விடுதலையளித்து வெற்றியீட்டும் விழா. கிறிஸ்துவின் பிறப்பு ஓர் இரட்சணிய விழா. பாவத்தின் அடிமைத் தனத்திலும், அதன் விழைவான மரணத்திலும் துடிக்கும் மனிதனுக்கு அருள் பொழிந்து, புதுவாழ்வு அளிக்கும் விழா. இவ்விழா ஓர் விடுதலை விழா-சமூக, பொருளாதார, அரசியல் அடிமைத் தனங்களில் சிக்கி பகைமையிலும், தனிமையிலும், வறுமையிலும், பசி தாகத்திலும், உரிமையற்ற அகதிகளாகத் துடி துடிக்கும் உள்ளங்களிற்கு உண்மை விடுதலைப் பயணத்தையும், அதன் பாரச்சுமைகளையும் உணர்த்தும் விழா.

ஒட்டு மொத்தத்தில் ஒளியின்றி, வழிதெரியாது, நம்பிக்கை யற்றவர்களாக தனியான, பொதுவான பாவத்தின் வேதனையிலும், சமூகவேறுபாடுகள், சாதிப்பிரச்சனைகள், பொருளாதார அநீதிகள், அரசியல் அடக்குமுறைகள் இவை அனைத்திலும் இருந்து ஒரு முழுமை யான விடுதலைக்காகத் தவிக்கின்றோம், ஏங்கி நிற்கின்றோம். இப் பேர்ப்பட்ட சூழ்நிலையில் தான் இயேசு ஒளியின் வடிவில் தோன்றினார். உலகின் அனைத்துத் தீய சக்திகளையும் வென்ற ஒளியாகவும், வழி யாகவும், சக்தியாகவும், முடிவாகவும் வந்தவர் இயேசுக்கிறிஸ்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் — ஒரு பார்வை

ஆண்டுதோறும் கிறிஸ்மஸ் விழாவை நாம் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியுடனும், நிறைந்த மனத்தோடும் கொண்டாட விரும்புவ தொன்று. சமூக ஒன்றிப்பில், குடும்பக் குதூகலிப்பில், புத்தாடைகள் அணிவதில், விருந்துண்டு மகிழ்வதில் சிறப்பு மிக்க ஒரு விழாவாக இது அமைகின்றது. இதைவிட மேலாக இல்லங்களை அழகுபடுத்தல், கிறிஸ்மஸ் மரம் அலங்கரித்தல், பரிசுப்பொருள் பரிமாறல் போன்றவை இவ்விழாவினை மெருகூட்ட நாம் மேற்கொள்ளும் செயற்பாடுகளாக மாறிவருகின்றன. இவை மட்டும் இவ்விழாவினை இக்காலகட்டத்தில் பூரணப்படுத்தும் என்று கூறிவிட முடியாது. மாறாக எமது மண்ணில் மக்கள் சிந்தும் அழுகைக் குரல்களின் பின்னணியில் அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட நாம் பணிக்கப்படுகின்றோம்.

எம் இனம் இன்று அன்பைத் தினம் தினம் தேடி அலைகின்ற நெஞ்சங்களாகவும், அடிமையின் கோரக் கொடுமைகளில் சிக்கித் தவிக் கின்ற உள்ளங்களாகவும், வறுமையின் விளிம்பில் வதைக்கப்படும் அந்நியர்களாகவும் ஒரு பரிதாப வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின் றது. இதன்னிமித்தம் தன்னம்பிக்கையை இழந்து, சுயமதிப்பின்மையை மறந்து, பல்வேறு அழுத்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் மனச்சோர்வுடனும், தனிமையுணர்வுடனும், அதீதப்பற்றுள்ள வாஞ்சை யோடும் எம்மினம் அலைமோதுகின்றது.

இந்தப் பின்னணிகளினூடே நாம் எதிர் கொள்ள விருக்கின்ற கிறிஸ்மஸ் விழாவிற்கு உயிரூட்டம் கொடுப்பது சிறந்தது. மாடடை குடிலில் மாபரன் பிறந்த நாளை நினைவு கூரும் நாங்கள் ஏழை எளியவர்களுடன் எம்வாழ்வையும் இணைக்க ஆடம்பர வாழ்வை, குதூகலங்களை மறந்து சமூக நல் ஒன்றிப்பில் இணைதல் அவசியமான தொன்று, அல்லல் படுபவன் என் நண்பன், ஆபத்தில் இருப்பவன் என் சகோதரன் எனும் உள்ளுணர்வு எம் இதயங்களில் உதயமாகவேண்டும். இன்று நம்மவர் மத்தியிலே வானமே கூரையாக, தரையே பஞ்சணை யாக படுத்துறங்கும் பல மக்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் மத்தியில் அன்பைப் பகிரும் உள்ளங்கள், அன்பி னால் அயலவரைப் புரிந்துகொள்ளும் இதயங்கள் முளைத்தெழ வேண்டும். இவற்றை நாங்கள் மேற்கொள்ள எம்மிடையே மலரும் அன்பியங்கள் எம்மைத் தூண்டவேண்டும். மேலாக "நாம் புதிய நோக்கைப் பெறுவதற்கு, நாம் இன்றைய நிலையிலிருந்து நமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றாகிய இறைவார்த்தையிடமும் அதன் முழுமையாகிய கிறிஸ்துவிடமும் திரும்பிச் செல்லவேண்டும். நற்செய்தியும் திருச்சபையின் போதனையும் கொடுக்கும் புதிய பதிலை உள்வாங்க வேண்டும்'' 3.

அன்று ஒளியின் வழியிலே நடந்து வந்த ஞானிகள் குடிலில் கண்ட குழந்தையை குனிந்து கும்பிட்டார்கள். எமக்கும் அவர்களின் மனப்பான்மை இன்றைய சூழலில் தேவையானதொன்று. அதிகாரத்தையும், கர்வத்தையும் விடுத்து தாழ்மையின் வடிவில் அந்தரித்து அல்லல்படுகின்ற மக்கள் மத்தியிலே அன்புப் பணியினால் ஒளிகொடுக்க ஆயத்தமாக வேண்டும். சோகங்கள் மறையவும், மகிழ்ச்சி பொங்கவும் வாழ்வு மாறவும் எம் இதயம் தேடிவந்த ஒளியாகிய கிறிஸ்துவை நாமும் ஏற்று. மற்றவர்களுக்கும் நாம் அவ்வொளியைக் கொடுப்பதில் நிறைவைக் காண்போம். நன்மைகள் பெருகவும், கிறிஸ்மஸ் விழாவும் அர்த்தமுள்ளதாக அமையவும் சகோதர உறவில் நாம் அனைவரும் தோளோடு தோள்கொடுத்து ஒருங்கிணைந்த சமூகத்தை இயேசுவின் ஒளியூடாக மலர்விப்போம்.

## முடிவுரை

எதற்கும் ஒரு காலம் உண்டு இன்பத்திலும், துன்பத்திலும் பொறுத்திரு மகனே எனச் சான்றோர் கூறுவர். இருளின் செல்வாக்கு வளர்வதும் ஒளி இருளை வெல்வதும், ஒளியின் மாண்பு குன்றுவதும் இருள் ஒளியை வெல்வதும் மனிதன் தன் வாழ்வில் எதிர்கொள்ளும் சாதாரண நிகழ்வுகளூடாக அவன் பெறுகின்ற அனுபவங்களாகும்.

சமூக, பொருளாதார, அரசியல் பின்னணிகளாலும், மேலாக எமது மண்ணில் நடைபெற்றுவரும் கொடிய போரின் அனர்த்தத்தினாலும் இருளின் ஆட்சி மேலோங்கி இருப்பது என்பது உண்மை அன்று இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர். மரண நிழலில் உள்ளோர்க்கு ஒளி உதயமானது. இந்த மகிமையின் ஒன்றிப்பில் வானோர் படைத்திரள் ஒன்று சேர்ந்து ''உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, உலகிலே அவர் தயவு பெற்றவர்க்கு அமைதி ஆகுக'' ( லூக். 2 : 14 ) எனப் புகழ்ந்தனர்.

இன்றும் எம்மண்ணில் இருளின் நடுவில் மரண நிழலின் எதிரொலிகள் ஊசலாடுகின்றன. ஆனால் இருளை வெல்லும் மகிமை நிறைந்த ஒளி அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஊடுருவ வல்லது. அந்த ஒளியின் வழியில் நம்பிக்கையைக் கொடுக்கும் கீற்றுக்களாக நாம் ஒவ்வொருவரும் மாறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தமுள்ள கிறிஸ்மஸ் விழாவைக் கொண்டாட இயேசுவின் ஒளியில் அன்புப் பிணைப்பால் ஈர்க்கப்பட்டு உந்து சக்தி பெறுவோம். இயேசு கொடுக்கும் ஒளி உண்மை விடுதலையளிக்கும், சமத்துவத்தைப் பேணும், மனிதத்தை வளர்க்கும்.

**அடிக்குறிப்புக்கள்.**

1. பால் லியோன், வ., **இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: இன்றைய உலகில் திருச்சபை**, தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, பக் – 802, 1967.

2. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், பக். – 830.

3. **புதுப்புனல்**, யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு, பகுதி இரண்டு, பக் – 02, 1994.

**உசாத்துணை நூல்கள்**


1. பால் லியோன், வ., **இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்: இன்றைய உலகில் திருச்சபை**, தூய சின்னப்பர் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 1967.

2. செல்வராஜ், எகஸ். டி., **புத்துலகம் படைக்கவே**, பவுல் இறையியல் மன்ற வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சி, 1991.




கி. பி. 1223 ஆம் ஆண்டு புனித பிரான்சிஸ் அசிசி முதன் முதலில் கிறிஸ்மஸ் குடிலை இத்தாலியில் உள்ள கிரேச்சியோ என்ற ஊரில் அமைத்தார். குழந்தை யேசுவின் திருவுருவத்தை மெழுகினால் செய்து, அதில் வைத்து உண்மையான மனிதர்களை மாதாவாகவும், சூசையப்பராகவும் அதில் நடிக்கச் செய்தார், எருதையும், கழுதையையும் அதில் நிறுத்தி மிகுத்த பக்தியுடன் கிறிஸ்மஸ் விழாவை கொண்டாடினார். பின்னர் இம் மரபு இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மன் போன்ற நாடுகளுக்கு குடில் பக்தியாக பரவியது. காலப் போக்கில் 16 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் நிஜமான ஆட்கள், மிருகங்களுக்கா அவற்றின் உருவங்கள் அழகாக செய்து பங்கு ஆலயங்கள், வீடுகளில் வைத்து பக்திமுயற்சியாக செய்யத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYNOPSIS

## JUBILEE AND THE INCARNATION

The concept of Jubilee year is count in the Old Testament. According to the books of Deuteronomy and Leviticus, this Jubilee year emphasizes two factors, viz., (1) Restoration of land and things and (2) Liberation of the people.

Though these two factors were strongly recommended by the scriptures for the Jubilee years, they were not observed at all in the lives of the Hebrews and Israel. Thesefore these factors were over and over again emphasized by the prophets in their time.

The idea of Jubilee year was again restressed by Jesus himself at the beginning of his mission. This Jubilee year had its own regulations to be observed. The important aspect to be noted here is that these regulations were observed and fulfilled during the time of Jesus. Jesus proclaimed the "year of grace" and he was constantly aware of the year and its regulations.

We are once again going to remember the birth of Jesus in this month of December. Let us be aware of the year of grace which has been promulgated by the Holy Father, and prepare ourselves in a worthy manner.

First of all let us love and respect one another because all are created in the image and likeness of God. Therefore we must work for social justice, fundamental human rights and also reconcile with one another as all human beings are equal.

**Rev. Fr. S. Joe Sunnystan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHY CHRIST WAS BORN

For the Christians of Sri Lanka, the birth of Christ poses a challenge today. They have suffered so much in the current war situation, that they are unable to understand deeply the meaning of Christmas. Under these circumstances it is profitable to search for the theological truths of Christmas. The people in Rome celebrated the festival of the Sun. This fell on the 25th of December, Catholics too started celebrating the birth of Christ on the same date. This happened in the year, 336 A. D. It is a significant step because the Sun gives light and energy to the whole world. Similarly, Christ was born to enlighten and give life to the whole world.

The Eastern churches celebrated the christening of Christ on the 6th of January, which was the feast of Christmas for them. "CHRISTTES MAS" means offering of Christ. At the dawn of creation, when God walked with man visibly, everything was perfect. Man was praising God, when man disobeyed (sinned), man-world and God became three different poles apart. To rectify this, error, God sent His Son as man, to redeem mankind. Yesterday's events become the history today. Similarly the birth of Christ becomes the history of redemption.

In course of time God had sent Isaiah the prophet, to foretell man about the coming of Messaiah. A virgin will give birth to a child, He will be named Emmanuel. Now most of the christians in Sri Lanka feel that Christ has not brought peace to His people, but the sword! It is His peace that He gives and not the worldly Peace. If we are truly following Christ, our life must become a witness to true faith. We must live for others. We must sacrifice our life for the sake of others. We ask the question why Christ was born? Christ came down to the world to redeem mankind.

**BRO. S. AINSLEY ROSHAN**
3rd Year Theology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE LIGHT OF THE WORLD

While the church is preparing for the great Jubilee of 2000, Christians all over the world celebrate with immense joy the birthday of Christ who is the author of history. St. Luke's gospel especially pictures Christ as the Lord of history.

In the context of a historical event, the Roman census of Augustus Caesar, Joseph and Mary go to Bethlehem, their own city and the city of David to register themselves. While in Bethlehem the time came for Mary to be delivered and she gave birth to her first - born son, in a cave as there was no room for them in the inn. The first news of the birth of the self-effacing Jesus was announced by angels to the shepherds who were ignorant, victims of contempt, poor, oppressed and despised by the Jews. The shepherds who lived in darkness saw the light and come first to worship him as the light of the world. They had no priceless gifts to offer him. Instead they announced to all what they saw and heard.

Likewise let the birthday of Christ make us effective instruments to bring his light and freedom and peace to all the suffering and oppressed people around us.

Mr. E. M. JEYASEELAN





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARY IN THE MYSTERY OF THE BIRTH OF THE SON OF GOD

The invisible God becoming man and being born of a woman is something incredible for many. What is impossible for man is possible for God. God has chosen Mary to fulfil His mistery of Salvation.

After the fall of the first parents, Mary's role in the plan of salvation is foretold indirectly in the book of Genesis. Prophet Isaiah speaks about the virgin who would give birth to a child (Is. 7 : 14).

The New Testament strongly affirms that Mary is the Mother of the Messaiah. In the early Church we find that some heretics who denied the motherhood of God.

The Virgin Mary giving birth to a Child poses many questions and controversies. Mary herself was puzzled when it was announced to her that she would conceive and bear a child. Her husband Joseph too, could not understand how Mary could conceive as a Virgin. Both of them were given the same answer by the angel. It was by the power of the Holy Spirit that Mary conceived a child. Mary was full of the Holy Spirit. Her role is unique in the mystery of the birth of the Messaiah and in the plan of salvation.

**Rev. Fr. P. C. NESARATNAM**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INCARNATION AND EVANGELIZATION

According to the infancy narrative of the Gospel of Luke, the Good News given to the poor shepherds of Israel by the Angels was that a saviour is born for them. It is this message of deliverance that made the birth of our Lord a good News to those poor shepherds. The Old testament also testifies the saving acts of God in history and in the New Testament we read how God in Jesus takes side with the oppressed and works for their liberations. Hence today in Sri Lanka, where a complex oppressive system exist, the work of evangelization has to be understood as a work of liberation. Only by presenting Jesus as the saviour of the people who are oppressed can we engage in a meaningful evangelization Mere propaganda about Jesus Christ through different media will not work but a hope giving presence in the midst of the struggles of the people only will touch them and call them for a deeper conversion.

**Rev. Fr. M. V. E. RAVICHANDRAN**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHRISTMAS – IN PRESENT CONTEXT

When the light of Jesus appears the people who live in darkness are astonished, filled with joy and find new life in it. His ever-shining light shines out forth and gives light to these who sit in darkness and in the shadow of death. In our present context, it is true that our people undergo several hardships and failures and at the same time the habit of selfishness is prevalent everywhere in our society. They don't take any interest or growth in the happiness of others. The integral growth of human life is on the decline. Many people want to satisfy their material needs and thus they neglect the growth of spiritual life. Due to the prolonged war our people spend their life time in fear and anxiety without knowing how to make this life meaningful.

The evils of our times pinpoint to us that the darkness has prevailed much in our society and it finds it difficult to be free from it. But the light of Jesus will pave way to get rid of these darkness and if we grip the light of Jesus strongly, we can stand against the evils of our present times. The life of Jesus should become our way of life in learning to live for others, to share the suffering of others and to become poor with the poor.

So let us renew and submit ourselves to the glorious light of Jesus, so that the Christmas that we celebrate may become more meaningful in our lives.

**M. ANTON AMALATHAS**
4th Year Theology



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" The Whole of the Christian life is
like a great pilgrimage
to the house of the
ABBA, FATHER "

— Tertio Millennio adveniente, 49 —

---

அடுத்த இதழில்

" பாஸ்காவும் மனித மாண்பும் "

உங்கள் ஆய்வுக் கட்டுரைகள்
இடம் பெற விரும்பினால்
31-01-1999 க்கு முன்னதாக
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசக நேயர்களே!

— உங்கள் விமர்சனங்கள் எங்கே?

— உங்கள் நண்பர்களுக்கு இறையியல் கோலங்களை அறிமுகப்படுத்தி விட்டீர்களா?

— உங்கள் நண்பர்களுக்கு இறையியல் கோலத்தை நத்தார் புதுவருட பரிசாக்கலாம் என்பதை மறந்துவிடாதீர்கள்!

— இச் சஞ்சிகைக்கு ஆலோசகர்களாக/முகவர்களாக பணியாற்ற விரும்புகின்றீர்களா?

உங்கள் தொடர்பிற்கு

கடிதத்தில் :

"இறையியல் கோலங்கள்"

புனித. சவேரியார் குருத்துவக் கல்லூரி,

கொழும்புத்துறை,

யாழ்ப்பாணம்

தொலை பேசியில் :

021 — 2482

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

ஆண்டு சந்தா ( அஞ்சல் செலவு உட்பட ) ரூபா. 80/=
தனிப்பிரதி ரூபா 25/=

தொடர்பு கொள்க:

''இறையியல் கோலங்கள்''
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
தொலைபேசி 021–2482

# Irai - Iyal Kolangal

A Tamil Theological Quarterly
Annual subscription (incl. postage within Sri Lanka): Rs. 80/-
Single Copy - Rs. 25/-

Subscription and correspondance to:

# Irai - Iyal Kolangal

St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna.
Sri Lanka.
T. P. 021 — 2482

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம் – 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org